அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

— Page No. -365.

ACC No. 18586.

மலர்: 8 இதழ்: 8 விலை அ 4	துன்முகி௵ கார்த்திகை௴ நவம்பர்—டிசம்பர் '56	வருட சந்தா ரூ. 2-4-0

இறைவன் அருளிய சிவிகையை ஏற்குமுன்
கருணையை நினைந்து கைகூப்பும் ஞானசம்பந்தர்

பெரியபுராணச் சித்திர விளக்கம் 32

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஆதிசங்கரரும் திருச்செந்தூரும் (திருப்புகழ்மணி) ...	337
2.	பாலசுந்தரி (ரசபதி) ...	340
3.	அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,)	349
4.	ஆலய வழிபாட்டின் அவசியம் (மு. ப. சுப்பையா) ...	354
5.	செல்வம் வேண்டின் வேண்டும் பண்புகள் (எம். பி. தியாகராஜன்) ...	356
6.	விபூதி தாரணம் (தென்னுப்பிரிக்கா ச.மு.பிள்ளை) ...	359
7.	ஆலயம் (அ. ராமமூர்த்தி) ...	362
8.	வாழ்வு (சி. வி. சுப்ரமண்யம்) ...	364
9.	பக்தியின் சக்தி (அ. கி. ரங்கராஜன்) ...	367
10.	திரிசிராப்பள்ளித் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ...	372
11.	மதிப்புரை ...	480
12.	Peace within and Peace without *(Thiruppugal Mani)* ...	482

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ௳ முதல் பங்குனி மீ௳ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ௳ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ஹு கார்த்திகை மீ நவம்பர்-டிசம்பர்—1956	இதழ் 8

ஆதிசங்கரரும் திருச்செந்தூரும்

(திருப்புகழ் மணி)

திருச்செந்தூரில் திருக்கோயில் கொண்ட முருகனை, ஆதிசங்கரரும் அருணகிரியாரும் ஒரே முகமாக அநுபவித்திருக்கின்றார்கள். அருணகிரி திருச்செந்தூரை அடியார்கள் மனதுக்கு ஒப்பிட்டு, ஹ்ருதயந் தனில் ஒளிர்பவனை முருகன் திருச்செந்திலில் குடிகொண்டான் என்றார்.

" அடன்மிகு கடதட விகடித மதக்களி
றனவரதமும் அகலா மாந்தர்கள்
சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்
அதிபதி எனவரு மொருதிரு முருகனை
அருள்பட மொழிபவர் ஆராய்ந்து
வணங்குவர் தேவேந்த்ர சங்கமே"

என்றார் தேவேந்த்ர சங்க வகுப்பில்.

பொன்றுதுன் தாள்நிழலில் போற்றியடி யேன்புகுதக்
கன்றுப்பூர் ஐயா!என் கண்ணெதிரில் வாராயோ

" அலைவாய்க் கரையில் மகிழ்சீர்க் குமர
அழியாப் புனித வடிவாகி
அரனார்க்கு அரிய பொருள் காட்டதிப
அடியார்க் கெளிய பெருமாளே "

என்றும் திருப்புகழில் பாடி யுள்ளார்.

ஆதிசங்கரர் சமுத்திரத்தை ஸம்ஸார சமுத்திரத் துக்கு ஒப்பிட்டு, திருச்செந்தூர் முருகனை கரையேற் றும் பெருமாளாய்ப் போற்றி இருக்கின்றார்.

" யதா ஸன்னி தானம் கதாமான வாமே
பவாம்போதி பாரங்க தஸ்தே ததைவ
இதிவ்யஞ்ஜ யன்னு ஸிந்துதீரே யயாஸ்தே
தமிடே பவித்ரம் பராசக்தி புத்ரம்"

என்றும்,

" மஹாம்போதி தீரே மஹாபாப சோரே
முனீந்த்ரா நு கூலே ஸுகந்தாக்ய சைலே
குகாயாம் வஸந்தம் ஸ்வபாவா வஸந்தம்
ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ குகந்தம்"

என்றும் ஷண்முக புஜங்கத்தில் பாடியுள்ளார்.

செந்தில் பத்து என்ற பாட்டில் இதே பாவத் தைக் காணலாம்.

" கடலெனக் கிடக்கும்
வினையினைத் தாண்ட
புணையெனக் கடத்துமே
உன் பாதாரவிந்தம்

துன்பக வாழ்க்கையை
இன்பக மாச்செயும்
அன்பக நினைவுசார் நின் பாதாரவிந்தம்
வேலையின் பேரலைகள்
உருக்குலைந்து அருவாகி
நீருகி ஒன்றுவதும் நின் பாதாரவிந்தம்

கலிவலத்தால் சிந்தை கடையாகிச் சாயாமல்,
வலிவலத்தாய்! மெய்ஞ்ஞான வன்மை யருளுதியோ

வற்றாத நாழிக்
கிணறுபோல் நின்னருள்
பூர்ணித்து நிற்குதே நின் பாதாரவிந்தம்.
(*அருள்மணித் திரள்* Vol II Part II)

அருணகிரியார் முருகனைப் போற்றி வழிபட வரம் வேண்டுகின்றார்.

" ஆசையில் கைகலந்து சும்மாசும்மா
பவஸாகரத் தழுந்தி எழாஎழா துளம்
உன் ஆறெழுத்தை நினைந்து குஹா குஹாவென
வகைவராதோ"

என்று திருப்புகழில் பாடியுள்ளார்.

" முருகன் குமரன் குஹனென்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வு என்றருள்வாய்"

என்று அநுபூதியில் வேண்டுவதும் யாவரும் அறிவார்கள்.

ஆதிசங்கரரும் குஹ நாமத்தில் மிகவும் ஈடுபட்டவராய், ஷண்முக புஜங்கத்தில் அடிக்கடி குஹ நாமத்தால் முருகனைப் போற்றுகின்றார். ஒரு நாமாவளியுண்டு. குஹ நாமத்தை சிறப்பிப்பது.

" கணேச கோவிந்த சிவோஹம் ஷண்முகம்
குஹேச சரவண பவேச சரணம்"

" ஓம் ஹ்ரீம் நமோ குஹாய
ஓம் நமஷ் ஷடாக்ஷராய
ஓம் ஹ்ரீம் நமோ குஹாய
ஓம் நமஷ் ஷடானனாய !"

ஓம் தத் ஸத்.

எச்சிலிச்சை நீக்கி, யினிதருள நீயிருந்த
கச்சினத்து வந்துன(து) கழல்காண்ப தென்றேயோ

முருகனடியார் 20

பால சுந்தரி

(ரசபதி)

தண்ணளி மிகுந்தது தமிழ்நாடு. திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி, பயனுள அந்நாட்டின் ஒரு பகுதி. சிறந்த அப் பதியைச் சேர்ந்தது ஒரு சிற்றூர். அறப்பெரும் செல்வர் ஒருவர், இனிய அவ்வூரில் இருந்தார். அவர் பெயர் **செல்வப் பிள்ளை.** குணம் சிறந்த அவர் மனைவியின் பெயர் **கோமதி.** இருவர்தம் இல்லற நல்லறம், இன்பமாக மகிழ்ந்து இருந்தது.

கலைஞர் உறவில் செல்வர் களித்தார். பொருள் செல்வம் பூரித்த அவர் நட்பால், புலவர்கள் உலகம் புளகிதம் கொண்டது.

ஒரு நாள் இரவு மணி ஒன்பது. எங்கேயோ சென்றிருந்த செல்வர், இல்லம் திரும்பினார். பூஜையறையில், இனிய துணைவி இருக்கின்றாள். நம்பன் வழிபாடு நடைபெறுகின்றது. அன்பு மிக்க செல்வர், அதை அறிந்தார். அடிமேல் அடிவைத்து நடந்தார். அங்கு இருந்த பீடத்தின் மேல் அமர்ந்தார்.

குமரா! முருகா!! குகா!!! இது கோமதியின் குரல். ஆம். இது குமுறு குரல்.

துள்ளி எழுந்தார் செல்வர். கோமதி உனக்கு எத்தனை நாள் சொன்னாலும் தெரியவில்லை. வீணாகக் கண்ணீர் விடுகிறாய். **குழந்தை இல்லை என்றால் என்ன குடி முழுகிப் போகுமா? சேய்கள் இல்லையானால், கடைசி நாளில் கவலை இன்றிக் கண் மூடலாம். ஏன் அது உனக்குத் தோன்றவில்லை?** அம்மையே! அப்பா! என்று அழைக்க, நமக்கு ஆண்டவன் உண்டு. ஆராதிப்பம். பரமன் மேல் பாடி மகிழ, மந்திர நாதமான பாடல் பல, மனனம் பண்ணியுளம்; புனிதமாகப் போகிறது நம் பொழுது; என்ன குறை நமக்கு?

ஸ்வாமி! தாங்கள் ஆடவர்; நான் பெண்பால்; தாங்கள் எடுத்துச் சொல்லும்போது, சரி என்று படுகிறது; மற்றவர் வாழ்க்கையைப் பார்க்கும்போது, மாறிவிடுகிறது மனம்.

அடடே! மறுபடியுமா கண்ணீர்? சரி சரி. புனிதை எனினும், உன் போக்கு என்னால் பொறுக்க முடியவில்லை, இன்னம் நீ இப்படியே வருந்துவதானால், கண்ணிற்கு அகப்படாதபடி எங்கேனும் போய்விடுவேன்; முடிவாகச் சொல்கிறேன்!

ஆளிலியென் ஊர்க்கே அளவிலஆள் தந்தருள்செய்
கோளிலியில், வந்தடியேன் கும்பிட்டு நிற்பேனே

இல்லை யில்லை; இனி வருந்தவே மாட்டேன்; என்னை மன்னியுங்கள் என்றாள் தேவி.

* * *

வெள்ளிக்கிழமை. மாலை மணி ஆறு. பொலிவு மிக்க கோமதியுடன் கோயிலுக்குப் புறப்பட்ட செல்வர், தம் வீட்டு வாயிலில், பழுத்த துறவி ஒருவர் நிற்பதைப் பார்த்தார்.

கதிர் காமன் கண்ணருள் பாலிப்பான். பிள்ளைகள் நால்வர் பிறப்பர். பிறக்கும் முதல் பிள்ளையை, தொண்டு செய் என்று வித்தகக் கதிர் காமத்திற்கே விடுவாயா? சம்மதந்தானே, என்றார் அந்தச் சாது.

விமலமான அவர் மொழிகள், பெரிய வியப்பை அளித்தன. மெய் சிலிர்த்தது. அப்படியே செய்கிறோம்! அப்படியே செய்கிறோம்! என்று தம்மையும் மறந்து தம்பதிகள் கூவினர்.

நகை முகமான துறவி, அரிய திருநீறு அளித்தார். இன்று பிட்சை இங்குக் கொள்ள வேண்டும் ஸ்வாமி! என்று வீழ்ந்து வணங்கி இருவரும் வேண்டினர்.

முதல் பிட்சை, நீ அளிக்கும் பிள்ளை! அது போதும்; வாய் மொழியை மறவாதீர் என்று, நன் முனிவர் அவர், விறு விறு என்று நடந்தார்; அவர் ஓதிய மொழிகள், உள்ளத்தை உருக்கின.

இவ்வளவும் ஒரு நொடியில் நிகழ்ந்தது. என்ன அதிசயம்? எவ்வளவு வேகமாகச் செல்கிறார்? இமையாது சிலைபோல் இருந்த செல்வர், கதிர்காமன் தான்! அவர் கதிர் காமனே தான் என்று, துடித்த மனத்துடன் தொடர்ந்து ஓடினார்.

அவர் அகப்பட்டால்தானே! எப்படியோ மாயமாக மறைந்து விட்டாரே! ஆடுகிறது செல்வர் உடல். உடன் தொடர்ந்து வந்து அவரை அமைதி படுத்திய கோமதி, என்ன இது? வாருங்கள்! செவ்வேளைக் கோயிலில் சென்று சேவிப்போம்! என்று, செல்வரை வலிந்து அழைத்துச் சென்றாள்.

பெருமான் கோயிலுள் புகுந்தனர். **நியதியான தெய்வக் கட்டளை நிறைவேறும்! ஐயமே வேண்டாம்** என்று அர்ச்சகர் எவர்க்கோ சொன்ன வார்த்தைகள், அசரீரி போல இருந்தது. உடல் சிலிர்த்தது. உருகியது உள்ளம்; பெருகியது கண்ணீர். சண்முகன் சந்நிதியைச் சார்ந்தனர். அருளொழுகும் முருகனை இனிது ஆராதித்தனர்.

பாய்மூர்க்க ஐம்புலன்கள் பாவநெறி தாவாமுன்,
வாய்மூரெம் ஐய!எனை வலிந்தீர்க்க வாராயோ

ஆறுமுக ஐயா! உனது அருளால், எங்கள் வாழ்க்கை இனி ஏறுமுகந்தான் என்று ஏத்தினர்: இல்லம் திரும்பினர்.

* * *

ஒவ்வொரு நாளும், இருவரும் கனிவிக்கும் கனவுகளே கண்டனர். கருப்பக் குறிகள் தோன்றின. மகிழ்ந்தது செல்வர் மனம். பத்தாம் திங்கள். அழகொழுகும் முகமுடைய பெண் குழந்தை ஒன்று பிறந்தது. பெரிதும் மகிழ்ந்தது பெற்றவர் உள்ளம்.

* * *

பாவையின் பெயர் பாலசுந்தரி. கவிழ்ந்து தவழ்ந்து இருந்து எழுந்து நகை முகமாகி, தள்ளம் பாறி நடக்கும் தளர்நடை பிறந்தது. அடுத்தும் கோமதி கர்ப்பம் ஆயினள். இப்படியே அடுத்த ஐந்து ஆண்டுகட்குள், மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன.

* * *

இல்லவே இல்லை என்று முடிவு கட்டிய குடுமபத்தில், நான்கு குழந்தைகள் இன்று நடமாடுகின்றன. விறுவிறு என்று **பிள்ளைகள் பிறப்பது, விதி விளைவிக்கும் விளையாட்டு.** ஆனல், நம்முடைய பிள்ளைகள் நம்பன் அருளிய சேய்கள்; மகிழ்ந்து இப்படி எண்ணியது, பெற்றோர் மனம்.

மனத்தை வயப்படுத்தும் மழலைகள்; கனிந்தும் கொஞ்சும் சொற்கள்; ஆடுதல்; ஓடுதல்; தொடர்தல்; பற்றுதல்: தாய் மடியில் தாவல்; தந்தை தோள் மேல் ஏறல். எப்போதும் ஒரே ஆட்டம் தான்; பாட்டுத்தான்; ஆம். இந்த இன்பத்தில், அந்த முனிவர்க்கு அளித்த மாபெரும் வாக்கைத் தம்பதிகள் மறந்தனர். தொடரும் மறதிகளால்தானே தொல்லை யிரும் பிறவி தொடர்கிறது.

* * *

ஒரு நாள் இரவு மணி ஒன்று. குடலாடத் திடுக்கிட்டு எழுந்தாள் கோமதி. அதே சமயம், செ...செ செய்கி...செய்கி...றேன் என்று, குழறியபடி கண் விழித்தார் கணவர்.

அச்சம் கோமதிக்கு அதிகரித்தது. என்ன ஸ்வாமி! ஏன் உங்கள் உடலம் இப்படி நடுங்குகிறது?

கோமதி! ரீம் ஐம் க்ஸீம் என்று, வீறிட்ட வேல் ஒன்று என்னை விரட்டுகிறது. சொன்ன சொல்லை மறந்தாய்! இந்த உலகை ஏய்ப்பது பாவக்கலியின் பண்பாகலாம்; என்னையும்

கறைக்காட்டில் இவ்வுடலம் காய்ந்துபொடி யாகுமுனே
மறைக்காட்டுச் செம்மால்!நீ வாஎன்றால் ஆகாதோ

ஏமாற்ற முடியுமா? என் தலத்தில் முதல் பிள்ளையை, இன்னும் விடவில்லையடா நீ! என்று உறுத்து எழுந்தது ஒரு குரல். திடுக்கிட்டு நோக்கினேன்; செவ்வொளி உருவச் சேய் ஒன்று, நடமாடிய படி, என்னை நோக்கி நகைத்தது. விதிர்த்த உடல் வியர்த்தது. விழித்துக்கொண்டேன்! அம்மா! என்ன பயங்கரம்!!

ஸ்வாமி! அன்று வாக்கு அளித்தோம்; மகிழ்ந்த வாழ்க்கையில் மறந்தது உண்மை. அன்று வந்த அடிகள், இன்று என் கனவில் எழுந்தருளினர்; பார்க்கவே அவர் தோற்றம், பயங்கரமாக இருந்தது.

நன்றி மறந்தாய்! எச்சரிக்கிறேன்! உயர்ந்த நல்லொழுக்கம் உடையது உன் குடும்பம்; சிந்தை ஒன்று, வாக்கொன்று, செய்கை ஒன்று என்றால், சிறந்த வாழ்வு சிதையும்! வாழ்விக்கும் கதிர்காமத்திற்கு வா! பாலசுந்தரியைத் தா! இளம் பெண் என்று எண்ணாதே! புனித அவளைக் காப்பது எம் பொறுப்பு!

அப்பப்பா! இப்படிக் கணீல் கணீல் என்று, அவர் வாயில் வார்த்தைகள் வந்தன. தருகிறேன் என்று அலறினேன்; உடனே விழித்தேன்.

ஓஹோ! எனக்கு மட்டும் இன்றி, உனக்கும் அறிவிப்பு உண்டாயிற்று, கோமதி!

ஆறுபடை வீடுடைய ஏறுமயில் வாகனா! உன் ஆடலே ஆடல்! மறதி வந்து கண்ணை மறைத்தது; எங்கள் பிழையை மன்னித்திடு அப்பா! சிறந்த உன் கட்டளைப்படியே செய்கிறோம்! என்று, கண்ணீர் வார தம்பதிகள் கதறினர். வைகறை நேரம், வந்தது.

அம்மா! கதிர்காமம் போவோமா? என்று படபடத்து உரைத்தபடியே, கண் விழித்தாள் பாலசுந்தரி.

பாலசுந்தரி! என் கண்ணே! உனக்கும் அழைப்பா? குமரன் உன்னைக் கூப்பிட்டானா! என்று, வாரி தாய் மகளை வயிற்றில் அணைத்தாள்.

அந்த சாமி என்ன அழகாயிருக்கிறார்! என்னைக் கூப்பிடுகிறார் அம்மா! நாம் போகலாமா?

பாலசுந்தரியைப் பார்த்த கண் வாங்காமல் செல்வர் பார்த்தார். பழுதறியாத அவர் இதயம், படபடத்தது. கோமதி! என்று கூவினர்.

ஸ்வாமி! நம்பன் திருவுளம் அதுவாயின், நாம் மறுக்க முடியுமா! இளம் குழந்தை வயது எட்டு; கதிர்காமத்தில், கவலை இல்லாமல், வாழ மகட்கு வழி செய்யுங்கள்!

என்னகத்தில் பேரொளியா யிருந்து விளையாடத்
தென்னகத்தி யான்பள்ளித் தேவேறி நில்லாதோ

ஆமாம் கோமதி! அதுதான் சரி என்றார் செல்வப்பிள்ளை.

*   *   *

புனித மனத்தொடு மறுநாளே புறப்பட்டனர். சில தினங்களில், அரிய கதிர்காமத்தை யடைந்தனர்; மாணிக்கக் கங்கையில் நீராடினர். எம்மான் கோயில் முன் இறைஞ்சினர்.

அப்பதியில் செல்லப்பிள்ளை, ஒரு சிறு வீடு அமைத்தார். உணவு உடைக்கு, வழி பல வகுத்தார். பாவையின் பாது காப்பிற்கு, இரு பாக்கியரை இருத்தினார்.

காமநாசர் குருநாதா! அமரர் கர்த்தனுன கதிரை யீசா! நேர் கடனை நிறை வேற்றினேன்: இனி உன் திருவுளம் போல் ஆக என்று துதித்தார்.

*   *   *

பால சுந்தரீ! இனி நீ இங்கேயே இருக்க வேண்டும்; தோகை மயில் வாகனுக்குத் தொண்டு செய்ய வேண்டும்; அதற்கென்றே வந்தவள் நீ அம்மா! என்று சொல்லிக் கொண்டே, கலகல என்று தாய் கண்மழை சிந்தினள்.

அப்பா! தாங்கள்தான், அம்மாவிற்குச் சொல்ல வேண்டும்; ஆறுமாத காலமாக, என் கனவில் வருகிறார் கதிர்காமர். அவருடன் நான் ஓடி ஆடி விளையாடுகிறேன்; வாழப்பிறந்த நீ, கதிர் காமம் வருகிறாயா என்கிறார். வந்துபார்! தொண்டு செய்! பந்தமறும் என்கிற அவர் மொழிகளை, உங்களிடம் சொல்ல அஞ்சியிருந்தேன். இனிய அவர் கட்டளை, இங்கு என்னை யீர்த்தது; இங்கு வந்தது முதல், தூய இன்பத்தால் என் உள்ளம் துள்ளுகிறது அப்பா! அம்மாவை, தம்பியருடன், ஊர்க்கு அழைத்துச் செல்லுங்கள்!

இந்த வயதில் இவ்வளவு தெளிவா? இவள் பேசுகிறாளா, அல்லது இவள் இதய ஏரகன் பேசுகிறானா? பெற்றோர் வியந்தனர். மாறி மாறி இவளை நோக்கினர். இதயத்தில் புகுந்து எம்மான் இருந்தானேயானால், இப்படித்தான் ஆவர் எவரும் என்று தேறினர். ஊர் நோக்கித் திரும்பினர். ஆரம்பத்தில், மனம் சிறிது அதிர்ந்தது! வர வர, பால சுந்தரியை அறவே மறந்தனர்.

*   *   *

அருள் ஒலி ததும்பும் கதிர்காம அருமையை, அக முகம் ஆனவரே அறிவர்.

அழகொழுகும் திருவுருவம்; காதளவு நீண்ட கண்கள்; நீறு பூத்த நெருப்பைப் போல், விபூதி விரவிய திருமேனி; ஜெபமாலை

பாடி யடிபரவும் பண்படியார் வாழ்கின்ற
கோடிகா வந்தெம்மைக் கூடுநெறி கூடாதோ

மார்பு; விறு விறு நடை; கதிர்காமன் கோயிலைச் சுற்றித் தூய்மை செய்தல்; வள்ளியம்மை முதலியோர் சந்நிதிகளைச் சுற்றி அலகிட்டு, மெழுகிட்டு, மா இலை தோரணம் கட்டி, பரமனைப் பாடி உருகுகிறார் பால சுந்தரியார்.

மற்ற நேர மெலாம், யாத்ரீக பக்தர்கட்கு பயனுன தொண்டு செய்தாள் பாவை. நாள் தோறும் இந்த நிலை.

இன்பக் கதிர்காமனுக்கு, இரண்டு கோயில்கள்; ஒன்று புறம்; மற்றொன்று பால சுந்தரியின் அகம். அவள் இதய கோயிலின் அருளொளி, புறத்தினும் மின்னிப் பொலிந்தது. அதனுல், எங்கு மான முருகனை, ஊடுருவி அவள் கண்கள் உணர்ந்தன. நம்பன் தெய்வ நாதம், நங்கை செவியில் நடமாடியது. அன்பர்களுடைய அரோஹர ஓசை, கதிர்காமத்தின் ஆனந்த கானம். அதைக் கேட்டுக் கேட்டுப் பரவசம் அடைகின்ருர், நம் பாவையார்.

சித்தர்கள், ஜீவன் முத்தர்கள், பக்தர்கள், பலபடப் பாலசுந் தரியாரை இன்று பாராட்டு கின்றனர். இது, அவர் இன்றைய நிலை.

*   *   *

கண்டியரசன் விக்ரம ராஜ சிங்கன். அவன் ஒருநாள் கதிர் காமத்திற்கு வந்தான். பொழுது போக்க வந்த அவனுக்கு, சிங்கள அர்ச்சகர் வரவேற்பு அளித்தனர்.

சுண்ணும்பு தீட்டப் பெருவிரல். சுட்டி ஒருவரைக் காட்ட சுட்டு விரல். மோதிரம் சூட்ட ஒரு விரல். கலியாணத்தில் மாதரைப் பற்றக் கடை விரல். ஒரு பயனும் இன்றி, நடு நிற்கிறது நெட்டை விரல்; அதுபோல், புத்திகெட்ட அப்பூபதி, பூமிக்குப் பாரமாக இருப்பவன்.

பழுத்தமனத் துறவு தாங்கி, பக்தர்கட்குப் பணி செய்கிருர் பாலசுந்தரி. காதக பாதகன், தன் பாவக் கண்களால் அவரைப் பார்த்தான். கடையாய காமிக்கு, கண்டதும் மோகம் கனன்று எழுந்தது. அண்மையில் இருந்தவர் மூலம், அவர் வரலாற்றை விசாரித்து அறிந்தான்.

நாணமில்லாமல் நேர் வந்தான். பல்லைக் காட்டினுன். ஏறெடுத்தும் பார்த்திலர் அந்த ஏந்திழையார். பின் தொடர்ந்தான். கண்டி அரசன் நான்! என்னைத் தெரியுமோ என்று மீட்டும் எதிர் வந்தான்.

அவன் குறிப்பை அறிந்த பாவையார், அம்மான் சந்நிதி யிலும் ஒரு அரசுண்டு என்று, அண்மையில் இருந்த அரச மரத்தைக் காட்டினள்.

பொன்றுமுனே வந்தடியேன் போற்றுமிச்சை பொங்குகின்ற;
என்று திருக்கோணம் எய்துவனே எந்தாயே

மரமல்ல நான்; இன்றைய மனித உலக மன்னன்!

ஆம். ஆம். முடிவிலொரு பிடிசாம்பல்! இதுவும் உண்மை.

என்ன சொன்னாலும் சரி; எப்படியும் நீ என் அரண்மனைக்கு வந்தே ஆக வேண்டும் தெரியுமா? என்று கறுவினன். அதற்கு முன் நீ நொந்தே போவாய் என்று நொடித்தார் நங்கையார்.

புனித க்ஷேத்திரத்தில், பூவையை எடுத்து செல்ல அஞ்சியது அவன் மனம். மகா கர்வி. ஆகட்டும் நான் பார்க்கிறேன்! என்று, மொறு மொறுத்துச் சென்றான் அந்த மூடவேந்தன்.

கதிர்காமக் கலியாணர் மடத்தில் இன்றிருக்கும் மடாதிபதி, உயர்ந்த அனுபூதி யுடையவர்; சிறந்த அவர் செவிக்கு, இச்செய்தி சென்றது.

கதிர்காமன், தனக்குரிய பொருளைத் தான் காத்துக் கொள்வன்; யாரும் இதனில் குறுக்கிட வேண்டா என்றார் அவர்.

*   *   *

கோட்டையிற் பெண் பிறந்தாலும் போட்ட புள்ளி போகாதோ? பால சுந்தரி! அம்மா! பெண் பாலர் நாம், என்ன செய்வது இனி என்று ஏங்கினர் பாக்கியர்.

வருவது வழியில் நிற்குமா? எது வந்தாலும் ஏற்போம் என்றார் தேவியார்.

உண்மை. இனி நீ கண்டி மன்னர் காதலி. காஷாயத்தைக் களைந்தெறி; சோற்றுக்கு வீங்கிகளின் சொத்து அது!

பால சுந்தரியும் பாக்கியரும், திடுக்கிட்டு நோக்கினர். ஆம். எதிரில் நிற்கிறார்கள், பாவி மன்னன் அனுப்பி வைத்த பணி மாதர்.

அம்மா! அழகிற் சிறந்தவர், அரசியார். பாவையர் இன்னும் பலருளர். உன்னைக் கண்ட பின், மன்னர் மனம் அவர்களை யெல்லாம் மறுத்தது. நீ பாக்யசாலி. வயிர நகைகள், பட்டுச் சேலைகள், இதோ பெட்டியில் இருக்கின்றன. பூட்டிக் கொள்; உடுத்துக் கொள். அரச ஆக்ஞை. பல்லக்கு வந்திருக்கிறது. உடனே புறப்படு!

சினந்த பாம்புபோல், பால சுந்தரி சீறி எழுந்தார். வாராத பழியை வலிய வரவழைக்கிறான். பாவ புண்ணியம் பாரான். இன்றைய உலகில், இப்படியும் இராவணர்கள் இருக்கிறார்களா?

எதிரில் வைத்த பெட்டியை எடுத்தார். எதிரில் இருந்தவர் மேல் எறிந்தார்.

அயர்ச்சிதரும் வாழ்க்கை அழிந்து கழியுமுனே
உயர்ச்சிதரும் கேதீச் சரமுவந்து காண்பேனே

சூர சம்ஹாரா! சிங்க முகனைப் பங்கம் செய்த தங்கமே! தாருகனைச் சாய்த்த தாரக சொருபமே! அக்கிரம விக்கிர மன் அழியானு! ஒழியானு! கண்ணுளா! கதிர்காமா என்று கதறினர்.

பத்து வயதுடைய ஒரு பாலன். அவன் கதிர் காமம் சேவிக்க வந்தவருள் ஒருவன். அவன் மேல் கதிர்காமன் ஆவேசித்தானே என்னவோ! பெற்றோரை நீங்கினன். ஓடிவந்தான். படீரென்று தெருக்கதவைத் திறந்தான். குபீரென்று நுழைந்தான். கண்ட வர் கலங்க, பற்களைக் கடித்தான். எழும்பிக் குதித்தான். ஹாம்... ஹாம் என்று உறுமினன்.

பால சுந்தரி! அவன் ஒரு காலத்தில் நம்மை ஆராதித்தவன் தான். இன்றோ, முத்தம் கொடுப்பான் போல் மூக்கைக் கடிக்கும் முரடனுக யிருக்கிறன். பாவையர் பலரைப் பங்கம் செய்தான். தலைமை அமைச்சன் தலையைத் தள்ளினன்.

அறிவு கற்பித்த, அடுத்த அமைச்சன் மனைவியை அழைத் தான். அவள் மக்கள் கழுத்தை, அலற அலற அறுத்தான். உரலில் இட்டான். இடி! உம்...குத்து! என்று உலக்கையைக் கொடுத்தான்.

ஆ! ஐயோ! என்று அலறியவளை, பளார்! பளார் என்று சவுக்கால் அடித்தான்.

இரத்தம் வடியுதே! குடித்த பாலும் பீறிட்டு அடிக்குதே! என் வயிறு துடிக்குதே! பத்து மாதம் சுமந்த வயிறு, பற்றி எரிய இடிப்பதா? முத்தமிட்டு வளர்த்த உடல்களை, நெறிய முறிய இடிப்பதா? பாலும் பழமும் ஊட்டிய பாழும் கையால், பொட்டு இட்டு மையிட்ட என் பாவிக் கைகளால், பொசுங்க நசுங்கச் செய்கிறேன் என்று, கதறி வீழ்ந்து மூர்ச்சித்த அவளை, குளத்தில் அழுத்திக் கொன்றுன் அக் கொடியோன். இந்த அராஜக ஆட்சி அழியும்; இனி ஒழியும் என்று அந்த மைந்தன் அலறினன்.

பணிமாதரும், பல்லக்கில் கொண்டு செல்ல வந்த வீரரும், பதறினர்.

சிலைபோல் சமைந்து கேட்டிருந்த பாலசுந்தரி மேல், ஆவேசித் தது அருளொளி.

ஐயோ! இது என்ன? பால சுந்தரியார், பத்திரகாளிபோல் தோன்றுகிறரே!

பெருமதுரை மீனுட்சி பேணும் பதியான
தருமதுரை உன்னிழலின் தயவுறுவ தென்றேயோ

அதைக் கண்டு, பயந்து ஓடினர் பணிமாதர். அவர்கட்கு முன் ஆடவரும் ஓடினர்:

உக்ரமான அத்தோற்றத்தை உணர்கிற போதே, உடலாடியது; குழம்பியது குடல். இதைத் தாங்காமல் ஓடிய அவர்களுள், இடைவழியில் சிலர் இறந்தனர்.

உயிர் தப்பி ஓடிய ஒருவன், அரசனிடம் வந்து செய்தியை அறிவித்தான். என்னடா கதை அளக்கிறாய் என்று, எரிந்து விழுந்தான் விக்ரமன்.

டுமீல்! டுமீல்!! டுமீல்!!!

என்ன அது? ஓடி வந்த ஒற்றன் ஒருவன், ஏலப்புலே என்னும் இரண்டாவது அமைச்சர், ஆங்கிலேயர்கட்கு ஊரைப் பிடிக்கும் உளவுரைத்து, அவர்களுடன் வந்து, ஊரை முற்றுகை யிட்டிருக்கிறார் என்றான். உத்தரவுப்படி, கண்டிப் படைகள் கண் சிவந்து எதிர்த்தன. முடிவு என்ன?

*   *   *

படைகள் புறம் கண்டன. கண்டியரசன் உயிர் பிழைக்க எண்ணினன்; ஒருவரும் அறியாதபடி கதிர்காமத்திற்கு ஓடி வந்தான். முருக பக்தையான பாலசுந்தரியைப் பற்ற நினைத்த பாவம், விடாது; என்றும் உன்னை விடாது, என்று சிலிர்க்கும் ஒலி, செவியில் விழுந்தது; எங்கு சென்றாலும் இதே செய்தி. ஐயோ! என்ன இது என்று அப்படியும் இப்படியும் ஓடினான். என்ன வியப்பு! கலகல நகை செய்து எதிரில் வருகிறார் அத்தேவியார். கண்டான்; உண்மையில் அது உருவெளித் தோற்றம். அஞ்சினன். நடுங்கினன். மன்னிக்க வேண்டும்! மன்னிக்க வேண்டும் என்று அலறி உலறி ஓடினன்; தொடர்ந்து வந்த வெள்ளையர் கண்டனர். உடனே பிடித்தனர். விலங்கிட்டனர்; சிறையில் அடைத்தனர். பார்த்திபனுக்குப் பயித்தியம் பிடித்தது.

என்னை மன்னித்திடு பால சுந்தரி! தாயே! மன்னித்திடு என்று பிதற்றி யிருந்து, ஒரு நாள் பரிதாபமாக இறந்தான்.

பாலசுந்தரி, நிம்மதியாகப் பலகாலம் கதிர்காமத்தானை ஆராதித்தார்; நரை திரை மிகுந்து, குடுகுடு கிழமாகிறவரை இருந்தார். ஒருநாள், கதிர்காம ஜோதிக்கு அரோஹரா என்று கண் மூடினர். அவரது ஆத்மா ஆநந்தானுபவம் கண்டது.

வாழ்க முருகன் அடியவர்.

**காப்பாய் படைப்பாய் கரப்பதும்நீ மெய்யானல்
ஆப்பனூர் மன்!எனைஉன் அடிக்குடியாச் செய்யாயே**

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.B.T.

திருக்காளத்தி:

சங்கமிருந்து தமிழாராய்ந்த தக்கோர்களில் தலைமை சான்றவராக விளங்கியவர் நக்கீரர். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனப்படுதலால், இவரது தந்தையார் மாணவர் மனச்சுருள் நீக்கி மலர்விக்கும் மாண்பு மிக்க ஆசிரியர் என்று தெரிகிறது.

இவர் காலத்தில் மதுரையை ஆண்ட வங்கிய சூடாமணி பாண்டியன் மனத்தில் எழுந்த ஐயத்தினைக் கண்டு சுத்தியாய்ப் பாடும் கவிஞர்க்குத் தருவது என்று ஆயிரம் பொன் கொண்ட அருமைக் கிழியைச் சங்க மண்டபத்தின் முன் தூக்கினான். அதற்கெனப் பாடல் செய்த பாவலர் முயற்சிகள் அனைத்தும் பாழாயின. முப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் தருமி என்னும் வறிய மறையவனுக்கு ஆலவாயண்ணல் அருந்தமிழ்ப்பாடல் ஒன்று அருளியனுப்பினார். அதனைப் படித்துணர்ந்த பாண்டியன் அது தன் கருத்திற்கிசைந்ததாதலை எண்ணிக் கிழியை அறுத்துக் கொள்ள அநுமதி யீந்தான். அதனையறிந்த அருந்தமிழ்க் கீரனார் அப்பாடலின் பொருளில் குற்றங் கண்டு தடுத்தனர். மறுநாள் இறைவரே புலவராயடுத்து வாதிட்டனர். உண்மையைப் பல்வேறு வகையால் உரைத்தும், கல்விச் செருக்கால் 'உடலெல்லாம் கண்ணுகக் காட்டினும் மொழிந்த நும் பாடல் குற்றம்' என்பன போன்ற வசை மாரி பொழிய மறக்கருணையான், அவர்க்குக் குட்ட நோய் வரவும், அந்நோய், கயிலை தரிசனத்தால் தீரவும் அருளினர்.

இன்பப் பரங்குன்றில் என்றுமுயர் பேறுதரும்
அன்பே! எளியேனை அரவணைத்துக் கொள்ளாயோ

அவ்வாறே பலதலங் கண்டுவரும் கீரனுரை செய்யும் பூசையிற் சிறிது பிழைத்ததால் கற்கிமுகி என்னும் பூதம் முன்னிருந்த 999 பேரோடு சிறையிட்டது. குறிஞ்சி நாயகன் அருளால் சிறை வீடுபெற எண்ணிய நக்கீரர் "நெடுவேலண்ணல் புகழைப் பாடுவது எங்ஙன்?" என்று மயங்கி நிற்றலும், முருகவேள் தோன்றி, "வளவாய்மை சொற் பிரபந்தமுள கீரனுக்குகந்து மலர்வாய் இலக்கணங் கள்—இயல்போதி, "அடிமோனை சொற்கிணங்க "உலகா முவப்ப" என்று அருளால் அளித்து" மறைந்தனர். அதனையே முதலடியாகப் பிடித்து "உலக முவப்ப வல னேர்பு திரிதரு" என வரூஉம் திருமுருகாற்றுப்படையை மொழிந்தனர். இந்த அரிய நூல் இளம்பூரணனது பன்னிரு செவியும் ஆரப் பருகமுதாகியது. ஓதும் அன்பர்களுக்கு உன்னிய உன்னியாங்கு உதவவல்லது. மணிமுடியரசர் வாழ்வு, மக்கட்பேறுதி நல்குவது. பிணி, மிடி, பகை, துன் பங்கள், பேய், கனவு, கள்வர், பாம்பு முதலியவற்றின் விஷங்கள் இவற்றை ஒழித்து முருகபிரானையும் முன்னுற வந்து நின்று காட்சி நல்கச் செய்ய வல்லது. இதனைப் பாடியதும் செவ்வேளின் திருக்கைவேல், வரைக்குகையை யிடித்து வழிசெய்ததோடு, கற்கிமுகியையும் கொன்று எல் லோரையும் காத்தருளியது. இதனை நம் அருணகிரியார்,

"கீத இசை கூட்டி வேதமொழி சூட்டும்
கீரர் இசை கேட்ட—க்ருபை வேளே"
"பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்
[புலவன்
இசைக்குருகி வரைக்குகையை இடித்து வழி காணும்"

என்றெல்லாம் பாடுகிறார்.

பின்னர் செவ்வேட் குமரன் 'தென் கயிலை தரிசனத் தால் நோய் தீரும்' என்று செப்பி, ஒரு பொய்கையில் மூழ்கித் திருக்காளத்தியிற் சேருமாறு செய்தனர். கீரரும் காளத்தியில் எழுந்து நோய் நீங்கிய திருமேனியுடன்,

---

நாடகத்தால் பக்தன் நானென்றே? ஐயோ!
ஏடகத்தாய்! இன்னுமெனை இவ்வுலகில் வைத்தாயே

ஞானப் பூங்கோதையுடன் காளத்தி எந்தையார் இணையடி யேத்தி இன்னருள் பெற்றார்.

மதுரைப் பதிவாழ்ந்து மாபெருஞ் செல்வியாக மாணிக்கவல்லி என்றொரு கணிகை இருந்தாள். அங்கவள் பால் திருமடந்தையும் கலைமடந்தையும் திருவவதரித்தது போல இருகன்னியர் தோன்றினர். பெண்களைப் பெற்ற தால் தன் குலத் தொழிலுக்கு இவர்கள் பேருதவியாக இருந்து பெருநிதியீட்டலாகும் என்று மனப்பால் குடித் தாள். அவர்கள் நாளுக்கு நாள் மதனார் செருக்கழியவும். மண்ணவர்கள் மனமிக மகிழவும், சிவஞானச் செஞ்சாலி யெனவும் வளர்ந்து பருவமுற்றனர்.

அவர்களைத் தன் குல வித்தைகளிற் பிரியம் வைக்கு மாறு செய்விக்க எண்ணிய தாய், காமலீலை கண்ணுறக் காட்டும் வண்ணச் சித்திரங்களும், விரக நோயை விளைவிக் கும் விதவிதமான இசை மிழற்றும் பறவைகள், யாழ் முத லிய இசைக் கருவிகள் இவற்றை யெல்லாம் சேகரித்தாள். அருட்கலையில் ஆர்வங்காட்டும் அம்மங்கையர்கட்கு மருட் கலையான மன்மதக்கலை கற்பிக்க ஆரம்பித்தாள்.

செய்த பல்வேறு பிறவியின் சிறந்த தவச் செறிவு, அவர்களைப் புன்னெறி புகவொட்டாது செந்நெறியாகும் சிவநெறியிலேயே நிறுத்தியது. நீறணிந்த அடியாரை நிலவணிந்த பரமனாய் வழிபடும் மேதக்க உணர்வும், அழிந் தொழியத்தக்க அல்லல் வாழ்வில் வரும் அற்ப சுகத்தில் அருவருப்பும், பூரியர் போற்றும் பொருட் செல்வத்தினைப் புறக்கணித்து, நேரியர் போற்றும் நின்மலச் சிவத்தின் அருட்செல்வத்தையே அவாவியும் நின்றனர் அந் நேரிழையார்.

இந்நிலையில், அம்மடவார்களுக்குக் கீரனார் அருளிய தும், பதினோராந் திருமுறையிலிடம் பெற்றதுமான 'கயிலைபாதி காளத்தி பாதி' என்ற ஞானப் பெருநூல்

கொடுங்குற்றம் என்னென்ன கொன்பிறப்பில் செய்தேனோ
கொடுங்குன்றம் சாராக் குறையுடையன் ஆனேனே

தினப் பாராயணத்திற்குச் சிறந்த நூலாயிற்று. காளத்தி நாதரைக் காண விருப்புற்ற கண்ணப்ப நாயனார் போன்றே இவர்களும் காளத்தியாரைக் கண்ணாரத் தரிசிக்கப் பெரிதும் விழைந்தனர். இவர்களது மனத்தைத் திருப்ப மாணிக்கவல்லி எவ்வளவு முயன்றும் பலனளிக்காமற் போகவே, அவள் "இவர்களை உலகியல் நெறியில் திருப்புவோர் இவர்களை எவ்வித பொருளும் கொடாமலே கூடிக் களிக்கலாம்" என்று தெரிவித்தாள். இஃதுணர்ந்த கள்வர்கள் இருவர், மங்கையாரின் மனநிலையுணர்ந்து இவர்களணிந்துள்ள அணிகளை வஞ்சத்தால் களவாட நெஞ்சத்திற் கொண்டனர்.

தாயில்லாத நேரத்தில் தவசியர் உருவில் வந்தனர். அவர்கள் காளத்தி காணும் விருப்பினால் செல்வதாகவும் கூறினர் கள்வர்கள். கள்ளமறியாத கன்னியர்கள்,

"காளத்தி காணப் பெற்ற கண்களே கண்களென்றும்
காளத்தி நகரிற் கேகும் கால்களே கால்களென்றும்
காளத்தி புகுங் கருத்தே கருத்தென்றும் கயிலைநாமக்
காளத்தி புகழு நாவே நாவென்றும் கற்றோர் சொல்வர்"

என்று கருதித் தங்களை எங்ஙனமேனும் காளத்தி தலத்துக்குக் கொண்டு செல்லுமாறு வேண்டினர். உடனே கள்வர்களும், "இவ்வுடலோடு தென்கயிலைக்குச் செல்கிறேன் என்று ஒருவர் விளையாட்டாகச் சொன்னாலும் கயிலையைச் சேர்வர். அங்ஙனம் செல்பவரை விளையாட்டால் தடுப்பவரும் சூரிய சந்திரர் உள்ளமட்டும் கடுநரகெய்திக் கவலையுறுவர். ஆதலினால் உமது கருத்துப்படியே செய்கிறோம் என்றனர்.

அந்நாள் நடு இரவிலே அன்னை அறியாதபடி குறிப்பிட்ட இடத்தில் வஞ்சியர்கள் வஞ்சகர்களைச் சந்தித்தனர். இவர்களை எக்காலும் பிரியாத இரு சேடியர்கள் வேண்டிய பொருள்களைச் சுமந்து வந்தனர். பிறகு கள்வர்கள் இவர்களுடன் கும்பகோணம், சிதம்பரம், காஞ்சி, காளகிரி

எத்துபல செய்தோர்க்கும் இப்பிறவி தீரச்செய்
புத்தூரில் வாழும் புனிதாகண் பாராயோ

முதலிய தலங்களைத் தரிசித்துக் காளத்தி யருகில் வந்தனர்.

வந்ததும், கள்வர்கள் அங்குள்ள தனித்த காட்டில் இம்மங்கையர்கள் உயிர் போக்கி மணி நகைகளைக் கள வாடும் கருத்தை மெல்ல மெல்ல வெளியிட்டனர். இக் குறிப்பைக் கண்டு அஞ்சிய இளையாளை மூத்தாள் தேற்றி, "இவ்வளவுங் காத்துவந்த காளத்தியார் இனியும் காவாது விடுவரோ! அஞ்சற்க" என்றாள். அதுபோது காளத்தி யண்ணலார் மலர் கொய்யும் திருத்தொண்டர்போல் எதிரே வந்தார். இவரைக் கண்டதும் கள்வர்கள் ஓடியொளிந்தனர். பெருமானும் அருகில் வந்து அவர்களிடம் நடந்தவெல் லாம் கேட்டருளி, "எதற்கும் இனி அஞ்ச வேண்டாம். கோதையீர் உம்மை காளத்தி கொண்டுபோய் விடுகிறேன்" என்று அழைத்துப் போய் அங்குள்ள கைலைமலை, தூர்க்கை மலை, நீல மலை, பொன்முகரியாறு, புண்ணிய மயூர தீர்த்தம் என்பவற்றைக் காட்டி மறைந்தருளினர். கன்னியர்கள் பிரானைக் காணாது பெருவியப்புக் கொண்டு இறைவன் எளிவந்த திறத்தைப் போற்றினர்.

பின்னர் பொன்முகரியில் நீராடி, நீறு பூசி, கண்டிகை பூண்டு, திருவைந்தெழுத் தோதிப் பரமனைப் பணிந்து நாகலிங்கப் பெருமான் திருமேனியில் நங்கையர் இருவரும் கலந்து மறைந்து சிவசாயுச்சியம் பெற்றனர்.

இவ்வாறு காளத்தி பிரானை இறைஞ்சி வழிபட்டாரிவ ரென்று கந்த புராணம் கழறுவது காணுங்கள்.

" சிலந்தி மாசுணன் மும்மதக்கரி சிவகோசன்
மலைந்திடுஞ் சிலை வேட்டுவன் கீரனே மடவார்
பலந்தரும் வழிபாட்டினால் பாட்டினால் பரனைக்
கலந்து முத்திசேர் தென்பெருங் கயிலையும் கண்டான்"

(தொடரும்)

ஆட்டுமுகம் ஆனையுடல் ஆம் பிருகு பூசிக்க
ஆட்டுபவம் தீர்த்துயர்செய் ஆடானை சார்வேனே

ஆலய வழிபாட்டின் அவசியம்.

(மு. ப. சுப்பையா)

1. **முன்னுரை** :—ஆலயம் கடவுள் வழிபாட்டிற்காக ஏற்பட்டது. இவ்வாலயங்கள் தமிழ் நாட்டின் பண்டைப் பெருமைகளை உணர்த்துகின்றன. நாட்டின் இருதயமாக விளங்குவதோடு தமிழரின் சிற்ப, சித்திரக் கலைகளையும் நன்கு உணர்த்துகின்றன. இறை வழிபாட்டின் அவசியத்தை அறிவோம்.

2. **கடவுள்** :—மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியே கடவுள். உலகில் உள்ள எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற ஒரு மாபெரும் சக்தியே கடவுள். கடவுள் இல்லாத இடமே இல்லை.

3. **முற்காலத்தில் இறை வழிபாடு**:—ஆதியிலே மனிதன் பகுத்தறிவின்றி காட்டிலே திரிந்துகொண்டு, இலை தழை முதலியவற்றை அணிந்துகொண்டு, காட்டிலே கிடைக்கும் காய், கனி, கிழங்குகளை உணவாகக் கொண்டான். நாளடைவில் தீயின் பயனை உணரலானான். தனக்கு உதவிய தீயை வணங்கினான். காலம் செல்லச் செல்ல தன் கற்பனையினால் உருவத்தை அமைத்துக் கொண்டான். தான் அமைத்த உருவங்களை—தெய்வங்களை—வணங்கினான்.

முற்காலத்திலே மக்களின் நிலை உயர்வடையவும், பல் துறைகளிலும் மேம்பாடடையவும், ஆலயங்கள் அவசியமே என எண்ணி ஆலயங்களை நிர்மாணித்தனர்.

4. **ஆலயங்கள் தோன்றக் காரணம்**:—திறந்த வெளியில் உருவம் இல்லாமல் உருவமற்று எங்கும் நிறைந்துள்ள இறைவனை, தன் ஐம்புலனை அடக்கி எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தித் தியானிப்பது கடினமாகும். இதற்காகவே ஆலயங்கள் அவசியம்.

5. **உருவம்** .—நாட்டிலே தற்காலத்தில் உருவ வழிபாட்டை வெறுத்துப் பேசுவோர் பலர். மனதை ஒரே நோக்கத்திற்குச் செலுத்தி வணங்க இவ்வுருவங்கள் உதவுகின்றன. எங்கும் உள்ள இறைவனுக்கு ஆலயம் தேவையா

தானப் பேராளா! தண்மதியாய்! கண்ணருள்செய்
கானப் பேராளா! கடையேற் கருளுதியோ

எனச் சிலர் எண்ணுவர். "பசுவின் உடல் முழுதும் பால் நிறைந்திருப்பினும் அதன் மடியில் அன்றோ பால் சுரக்கிறது. அதுபோல்தான் கோயிலில் கடவுள் சிறப்பாக நின்று மக்களுக்கு அருள் புரிகின்றார்" என்று உயர்திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் கூறுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். "எங்கும் ஒலி அலைகள் பரவிக் கிடந்தாலும் எல்லாவற்றையும் சேகரித்து அதை வெளியிட வானொலிப் பெட்டி எவ்வாறு தேவைப்படுகிறதோ அதுபோல ஆண்டவனுக்கு ஆலயம் அவசியம்" என்று கூறுகின்ற அடிகளாரின் கூற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

6. **கோயில்கள் எவ்வாறு பயன்பட்டன?** (1) பண்டைய நாகரீகத்தை அறிவுறுத்துகின்றன. (2) இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் வளர்த்தன. (3) மருத்துவ நிலையங்கள் இருந்தன. அரசாங்க அலுவல்கள் நடைபெற்றன. (5) தருக்க மண்டபம், அரங்கேற்றும் மண்டபம், நீதி பரிபாலனம் முதலிய பல அலுவல்களும் நடைபெற்றன.

7. **ஆலய வழிபாட்டின் பயன்:**—கடவுளிடம் இடைவிடா அன்பு கொண்டு வழிபட்டு வந்தால் நமது ஆபத்துக்கள் நீங்கி நினைத்த காரியம் கை கூடும். ஆலய வழிபாட்டால் அமைதி உண்டாகும். நற்குண நற் செய்கைகள் தானே வந்தடையும். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்"—என்பது வள்ளுவர் குறள். பிறவியாகிய பெரிய கடலைத் தாண்டி நன்மை பெற வழியுண்டாகும். சைவ சமய குரவர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர் அவர்களது பக்தியாலேயும், ஆலய வழிபாட்டாலேயுமே மேம்பாடுற்றனர்.

8. **முடிப்புரை:**—இன்று தமிழ் நாட்டில் மருள் நெறி, பட்டி தொட்டி எங்கும் பரவிக் கிடக்கின்றது. நாம் மருள் நெறியை நீக்கி அருள் நெறியைப் பரப்பி ஆலய வழிபாட்டைச் செய்து அருள் நெறி இன்று இன்னும் விரைவில் பரவ ஆவன செய்ய வேண்டும்.

காவணமும் கண்மணியும் போலக் கனிவளிக்கும்
பூவணத்து வாழ்வே என் புந்தியினில் வந்தருளே

செல்வம் வேண்டின் வேண்டும் பண்புகள்

(எம். பி. தியாகராஜன்)

"பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை அருளிலார்க்கு அவ்வுலகமில்லை" என்று கூறும் திருக்குறள். எனவே இம்மை உலகமும் மறுமை யுலகமும் நம்மை யேற்றுக் கொள்ள வேண்டுமெனின், பொருளும் அருளும் நமக்குத் தேவை. அவ்வகளின் தொடர்பும், எதன் வழி எதை அடைய வேண்டு மென்பதையும் திரு இராமலிங்க சுவாமி கள் அவர்கள் தெய்வமணிமாலையில் ஒரு பாடலில் அழ காக விளக்குகிறார்கள். பொருள் வழி அருளையடைய முடியுமா? பொருள் வழி இம்மை உலகின் மக்களின் நன் மதிப்பையும் அன்பையும் பெற முடியும். திரு அருள் அவைகளுக்குக் கட்டுப்பட்டதல்ல. அருள் வழி அடை யாத பொருட் செல்வம் ஆகாமிய வினையை வளர்க்கும். அதன் வழி இருவினைப் பெருக்கமும், அவ்வினைகளைத் துய்க்க பிறவிப் பெருக்கமும் உண்டாம். அருள் வழி ஒன் றினாலேதான் இருவினை யொப்பு ஏற்பட்டு மலபரிபாகம் முதலிய மேற்படிகளின் அடைவு ஏற்படும்.

பொருள் வேண்டிப் பிரார்த்தித்து, அப்பிரார்த்தனைப் பேற்றினால் திரு அருள் கூட்டுவிக்கும் வழியில் பொருள் தேட வேண்டும். "அயலார் நிதி யொன்றும் நயவாத மனம்" வேண்டும். அம்மனமே தூய மனமாகும். அப் போது அருள் நாட்டத்தில் விருப்பமேற்படும். அதன் வழி வாய்மை உண்டாம். பிறரைச் சொல்லாலும், செய்கை யாலும் வஞ்சிக்க எண்ணங்கள், அருள் நாட்டத்தில் ஈடு படும் தூய மனதில் எழா. எனவே, "வாய்மையும் தூய்மை யும் தந்து நின் திருவடிக் காளாக்குவாய்" என்று சென்னை கந்தகோட்டத்துள் ளுறையும் முருகப் பெருமான் முன் பின்வரும் பாடலில் தம் வேண்டுகோளைக் கூறுகிறார்கள்.

சுழியல் பிறவியலை தோய்ந்து முழுகாமல்
சுழியல் அருள்சுழிதான் சுழித்தென்னைக் காவாதோ

"ஈயென்று நானொருவ ரிடநின்று கேளாத
இயல்பும், என்னிட மொருவர்ஈ
திடுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமும், இறையாம்
நீஎன்றும் எனைவிடா நிலையும், நானென்றுமுன்
நினைவிடா நெறியும், அயலார்
நிதியொன்றும் நயவாத மனமுமெய்ந் நிலையென்றும்
நெகிழாத திடமும், உலகில்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
தீங்கு சொல்லாத தெளிவும்,
திரமொன்று வாய்மையுந் தூய்மையுந் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே."

வஞ்சித்து பொருளீட்டக் கூடாதெனின், யாசித்துப் பொருள் பெறலாமோ யெனின், "ஈயென்று நானொருவ ரிடம் நின்று கேளாத இயல்பு" வேண்டுமென்று முதலில் பிரார்த்தித்திருக்கிறார்கள். நம்மை யாசிப்பவர்களுக்கு நாம் உபகாரார்த்தமாக இருக்க வேண்டுமே யல்லாது நாம் பிறர் உபகாரத்தை நாடுதல் அருள் வழிக்கு ஊனமாகும். எனவே, "என்னிடமொருவ ரிடுவென்றபோது அவர்க் கிலையென்று சொல்லாம லிடுகின்ற திறமும்" என்னும் வேண்டுகின்றனர். அப்படிப்பட்ட செல்வம் நிறைந்த நிலையில் இறைவனை மறந்து வாழ்தல் மனிதர்களிடம் இயற் கையாகக் காண்கிறோம். "இல்லையே யென்னாத இயற்பகை நாயனாரைப் போன்று நல்ல செல்வாக்குடன் வாழும் நாளி லும், இறைவனுக்காக மனைவியையும் தியாகம் செய்ய முற்

அஞ்சலித்தார்க் கேவ்வெள்ளை யானை யருள்செய்த,
அஞ்சைக் களத்தப்பா! அடியனைவா என்றுயோ

படும் மனப்பண்பாடு மனித இயற்கையை கடந்த நிலையாகும். அந்தப் பண்பாடு வேண்டின், "நீ என்றும் எனை விடா நிலையும் நானென்றும் உன் நினைவிடா நெறியும்' வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். அதுவே செம்மைநெறியும் சிவநெறியுமாகும். "அந்த மெய்ந் நிலை வழுவாதிருக்க வேண்டுமென்று பின்னும் வேண்டுகின்றார். ஏன்? செல்வம் நிலையாமை கருதி அவ்வண்ணம் வேண்டுகின்றார். வாழ்க்கை முழுவதும் செல்வாக்குடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டல்ல அவ்விதம் பிரார்த்திப்பது. வறுமையுற்ற இடத்தும் திருவருள் கொடுத்த அந்நிலையும் நன்மைக்கே என எண்ணி மனம் சோர்வடையாமல், இளையான்குடிமாற நாயனாரைப் போன்று நள்ளிருளில் "சோறிடு" என்று வந்த சிவனடியார்க்கு "இலையென்று சொல்லாமல்" சோறிடுவதற்கான முயற்சியைச் செய்யும் பண்பாடே மெய்ந்நிலை நழுவாத நிலையாகும். அப்படிப்பட்ட மனமே திடமனமாகும்.

செல்வத்தினால் வரும் தீங்குகளில் முக்கியமானது "சீயென்று, பேயென்று, நாயென்று பிறர்தமைத் தீங்கு சொல்வது." அப்படி பிறரை தீங்கு சொல்லாத தெளிவு செல்வம் வந்துற்றபோது இருக்க வேண்டுமென்று பிரார்த்தித்து, அதன் வழி வாய்மையும் தூய்மையும் வேண்டி முருகப்பிரான் திரு அடிகளுக்கு ஆளாக்கிக் கொள்ள வேண்டி, தம் பிரார்த்தனையை மேற்படி பாடலில் முடிக்கின்றார்கள்.

இது மனனத்திற்குரிய ஒரு சிறந்த பாடலாகும். அப்படிப்பட்ட பாடல்களை மனனம் செய்வதால், அவைகளின் கருத்துக்களும், அக்கருத்துக்களின் தூய பண்பாடுகளும் நம் மனதில் பதியப் பதிய, சித்த சுத்தியேற்பட்டு செம்மை நெறியி லீடுபாடுண்டாம்.

செவிநாசி உய்திபெற நாதமணம் செய்யும்
அவிநாசி யாயென்னை வாவென் றழையாயோ

விபூதி தாரணம்

(தென்னாப்பிரிகா, ச. மு. பிள்ளை அவர்கள்)

விபூதி தாரணம் என்பதற்குப் பொருள் விபூதியை அணிந்து கொள்ளல் எனப்படும். 'விபூதி' என்பதை இரண்டாகப் பிரித்தால் 'வி—பூதி' என நிற்கும். விகரமானது ஓர் வார்த்தையின் முதலில் நின்று இன்மைப் பொருளையாவது மிகுதிப் பொருளையாவது உணர்த்தும் ஓர் உபசர்க்கம். உதாரணமாக, விமலன் என்பது மலமில்லாதவன் எனப் பொருள் பயப்பதால், விமலன் என்பதின் முன் நிற்கும் விகரமானது, இன்மைப் பொருளை உணர்த்திற்று.

விநாயகன் என்றால் மேலான நாயகன் என்று பொருள். ஆதலால் விநாயகன் என்பதன் முன்னின்ற விகரமானது மிகுதிப் பொருளை உணர்த்திற்று.

விபூதி என்பதிலும் விகாரமானது மிகுதிப் பொருளையே உணர்த்துகின்றது. ஆதலால் விபூதி என்பதின் விகாரத்திற்கு "மேலான" என்று பொருள்.

"பூதி" என்றால் ஐஸ்வரியம் என்று அர்த்தம். ஆகவே, விபூதி என்பதற்குத் திரண்ட பொருள் மேலான ஐஸ்வரியம் எனப்படும்,

விபூதியை மேலான ஐஸ்வரியம் எனச் சொல்லுதற்குக் காரணம் யாதெனில், உலகத்திலுள்ள பொருட் செல்வமானது மக்களின் சுகத்திற்கு ஏதுவாயிருந்தாலும், அச் செல்வமும் அச்செல்வத்தினால் அடையும் இன்பமும் என்றென்றும் நிலைபெற்றிராமல் அழிந்து போகும் தன்மைத்தாதலினாலும், விபூதியானது அவ்வாறின்றி ஆணவம்,மாயை, காமியமாகிய மும்மலங்களையும் நீக்கிச் சிவானந்தப்பேற்றை விளைவிக்குந் தன்மைத்தாதலின் அதை மேலான ஐஸ்வரியம் எனச் சொல்லத் துணிதல் சாலப் பொருத்தமேயாம்.

இனி, இவ்விபூதியின் வரலாறு என்னையோ வெனின் கூறுதும். சிருஷ்டி ஆரம்பத்தில் நிஷ்கள வடிவமாயிருந்த

சிவபெருமான், ஆன்மாக்களுக்கு அருள் செய்தற் பொருட்டு, சகள வடிவங் கொண்டு தம்மின் வேறுகாத அருட்சக்தியை ஓர் பெண்ணுருவாக்கி, அவ்வம்மையை நோக்கி "சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக் கிரக முதலிய பஞ்ச கிருத்தியங்களையும் நீயே செய்து முதன்மை பெற்றிரு" என்று அருளித் தாம் சுயேச்சையா யிருந்தனர். அதற்குப் பிராட்டியார் நான் செய்யும் அத் தொழிலிற்குக் காப்பாக உம் அடையாளம் தந்தருள வேண்டுமென வேண்டலும், சிவபெருமான், உன்னுடைய பல கலைக்குள்ளே சிவகலை, தருமவடிவு கொண்டிருக்கிறது. இன்னும் சில கலைகளோடு உன்னைப் புதல்வியாகப் பெற வேண்டுமென்னும் அவாவால் பாற்கடலில் தவஞ்செய்து கொண்டிருக்கிறது. நீ அதிற்சென்று பசுவாய் உதிப்பா யென்று அருளினர். முதல்வன் ஆணையின்படி அக்கலை கள் பாற்கடலினிடத்தே நந்தை, பத்திரை, கபிலை, சுரபி, கமுனை என்னும் ஐந்து பசுக்களாய் பிறந்து, சிவலோகத்தை யடைந்து இடபத்தோடிருந்தன. அவற்றினுடைய கோமே யத்தைப் பரமசிவன் எடுத்து ஆகம விதிப்படி தகித்து, அந்நீற்றினை அள்ளித் தமது நெற்றியிலே தரித்துக் கொண்டு இதுவே நின் ஐந்தொழிலுக்குக் காப்பாகும் என்று விமலைக்குங் கொடுத்தருளினர்; விமலை அதைப் பெற்றுத் தரித்துக் கொண்டு தன்னுடைய ஏவலால் ஐந் தொழிற் செய்யும் பிரமன் முதல் சதாசிவன் ஈறாக உள்ள ஐவருக்கும் கொடுத்து, இது உங்களுக்குக் காப்பாகும் என்றார். அது உயிர்களுக்குக் காப்பாகும் பொருட்டு ஜீவர்களுக்கும் அணிந்து கொள்ளும்படி கொடுக்கப்பட் டது. இதுவே விபூதியின் உற்பத்தியாம்.

இவ்விபூதிக்குப் "பூதி" என்றும், பூசிதம் என்றும், க்ஷாரம் என்றும், நீறு என்றும் அநேக நாமங்கள் உண்டு. சாலோக சாமீப சாரூபசாயுச்சியம் என்னும் நான்குபெருஞ் செல்வங்களைத் தருவதால் "விபூதி" என்றும், அஞ்ஞான

க்ஞ்ச மலரானைக் கனிவுகண்டு வாழ்வித்த
வெஞ்சமாக் கூடற்கு விரைகின்ற தென்னுளமே

இருளை நீக்கி ஞானப் பிரகாசத்தைக் கொடுப்பதால் பூசிதம் என்றும், சகல ஆபத்தையும் நீக்குதலால் க்ஷாராம் என்றும், மும்மலங்களையும் நீக்குவதால் நீறென்றும் பெயர் பெற்றது.

சக்தியினுடைய வடிவே விபூதி என்பது, "சொல்லரிய ஞான சக்தி வடிவாம் நீறு" என்னும் திரு வாக்கால் அறியற்பாலதாம். நம்முடைய ஆன்மாவானது ஆணவம், மாயை, காமியம் என்னும் மும்மலங்களால் பந்தப்பட்டிருப்பதால் "பசு" வெனச் சொல்லப்படும். இவ்விதமாகப் பந்தப்பட்டிருக்கும் பசுக்களை, பரிசுத்த ரூபமாகிய பசுக்களின் கோமேயத்தை மூன்று தரம் புடமிட்டு, அந்த நீற்றினாலேயே அப்பசுக்களின் மும்மலங்களை நீக்கும் இறைவன் கருணைத் திறம் சாலவும் வியத்தற்பாலதாம்.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வாரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாரும் சிவநெறி
சிங்காரமான சிவனடி சேர்வரே

என்னும் திருமூலர் திருமந்திரத் திருவாக்கால் அறியப்படுகிறது. அன்றியும், பாண்டிய நாட்டை சமண் மூடியபோது, பாண்டியன் சபையில் நம்முடைய ஞான சம்பந்தப் பிள்ளையாருக்குத் துணை நின்று "சைவ சமயமே சமயம், சிவபெருமானே முழு முதற் கடவுள்" என்று ஸ்தாபித்துப் பிரகாசப்படுத்தியும், சைவ சமயத்தை வளர்க்கக் காப்பாய் நின்றதும் இந்த விபூதியே. இன்னும் இதன் பெருமைகளை எல்லாம் நம் காழிப் பெருமான் அச்சமயம் தாமருளிச் செய்த "திருநீற்றுப் பதிகத்தால்" அறியலாம். தேவர்களும் இவ்விபூதியைத் தரித்து வருகிறார்கள் என்பதை "வானவர் மேலது நீறு" என்பதனால் அறியக் கிடக்கின்றது. இன்னும் சகலவிஷயத்திற்கும் இவ்விபூதியே காப்பாகும் என்பதைக் கடைப்பிடிக்க ஆணவம், மாயை, காமியம் ஆகிய இம்மூன்றையும் சுடவேண்டி "விபூதி" யானது மூன்று தரம் புடம் போட்டுப் பஸ்பமாக்கப்படுகிறது.

பாண்டிக் கொடுமுடிப் பதிநின்றன் கண்ணருளை
வேண்டுகின்றேன், என்னை விரைந்தேற்றுக் கொள்ளாயோ

ஆலயம்

(அ. ராமமூர்த்தி)

ஆலயம் என்றதும் சாதாரணமாக நான்கு பெரிய மதிற் சுவர்களோடும் பிரகாரங்களோடும் வானளாவிய கோபுரத்துடனும் கூடிய கோவில் ஒன்றுதான் நம் கண் முன் வந்து நிற்கும். ஆனால் உண்மை பக்தர்களுடைய கண்ணோட்டத்தில் இவ்வுலகம் முழுவதுமே இறைவனுடைய ஆலயமாக மதிக்கப்படுகிறது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரமனை அவர்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டுமா காணுவர்? எக் காட்சியைக் கண்டாலும் அதை இறைமையின் அம்சமாகத்தான் அவர்களால் காண இயலும்.

காண்பன யாவும் கடவுள் மயமே என்ற தத்துவத்தை உணர்ந்தவர்களால்தான் ஆலயத்திலும் கடவுளைக் காண முடியும். கோவிலில் உள்ள விக்கிரகங்களைப் பரமனுடைய திருவுருவங்களாகக் கருதி வழிபடும் பண்பு, கோவிலுக்கு அப்பாலுள்ளவற்றையும் கடவுளாகக் காண முடிபவர்களுக்கே உண்டு.

இதிலிருந்து ஆலயம் என்ற அமைப்பு அனாவசியமென்று நான் கருதுவதாக நீங்கள் நினைத்துவிடக்கூடாது. இறைவன் அருவமானவன் மட்டுமல்ல. அவன் உருவமானவனுங்கூட! உருவமுடையவனாக அவனைக் காண ஆலயம் உதவுகிறது. அது மட்டுமல்ல. அவனைப் பாலனாக, குமரனாக, கல்யாண புருஷனாக, அபயம் கொடுக்கும் அண்ணலாக பார்க்கவும் உதவுகிறது. அவனுக்கும் ஒரு வாழ்க்கையைக் கற்பித்து அதை சிரவணம் செய்யவும், ஆனந்தம் பெறவும் வகை செய்கிறது.

அன்றாட வாழ்க்கை அல்லல்களிலிருந்து மனதைக் கட்டவிழ்த்துவிட்டு ஓய்வையும், அதே சமயத்தில் உண்மையையும் அனுபவிக்க ஆலயம் இடந்தருகிறது.

கருவூர் பிறவிபல கண்டதுயர் தீர்த்துன்
கருவூர் தனிலிருத்திக் காவாய் எம் கோவே

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை. பசுங் கொடிக்கும் கொழு கொம்பு வேண்டும். அதுபோல் மாசற்ற மனத்தினராயினும், ஈசனைப் பற்றிய ஞானம் பெற்றவராயினும் அவர்களுக்கென ஒரு வழிபாட்டு முறை அவசியமே. அதற்கு ஆலயத்தைவிடச் சிறந்த இடம் வேறில்லை.

ஆலயத்தில் நாம் இறைவனைத்தான் வழிபடுகிறோ மென்று அர்த்தமில்லை. **அங்கு நாம் நம்மையும் வழிபட்டுக் கொள்கிறோம்!** ஆணவம், தற்பாவம் போன்ற மலங்கள் சிறிது நேரமாவது ஆலயத்தில் நம்மை விட்டு அகன்று விடு கின்றன. அந்த அசட்டு மலங்களற்ற நிலையில் நமது சரீரமே ஒரு ஆலயமாகி விடுகிறது!

இறைவனை வணங்குவதென்பது அவன் படைத்த எல்லாவற்றையும் வணங்குவதுமாகும்.

மாசற்ற நிலையில் எந்த ஒரு பொருளும் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பெற்றுவிடுகிறது.

ஆலயத்தில், இறைவனுக்கு முன்னால் நாம் மிகவும் அற்பமானவர்கள் என்ற உணர்வைப் பெற்று நம்மை உயர்த்திக் கொள்கிறோம். நமது தாழ்வை உணர்ந்து அங்கே நமது உயர்வு தோன்றுவதை அறிகிறோம்.

வழிபாடு எங்கு வேண்டுமானாலும் நடைபெறலாம் என்றாலும், ஆலயம் அதற்கென அமைதியானதொரு சூழ் நிலையையும், மன நிலையையும் அளிக்கிறது. ஆண்டவன் அகண்டமாகவும் அணுவாகவுங்கூட உள்ளான் என்பதை யும் அது நினைவுறுத்துகிறது. எங்குமுள்ள இறைவன் அங்குமுள்ளான் என்று அறிய வகையிருப்பதால், ஆலய வழிபாடு பாரமார்த்திக வாழ்க்கைக்கு ஒரு சிறந்த சாதன மாகும்.

நீடலையாற் றுப்பிறவி நீடித்(து) அலைத்ததுவே
கூடலையாற் றூராய் என் கூவுகுரல் கேளாயோ

வாழ்வு

[சி. வி. சுப்பிரமண்யம்]

வாழ்வு என்பது இருவகைத்து, (1) உயர் வாழ்வு. (2) உயர்வரிய வாழ்வு. உயர் வாழ்வு என்பது திருவடி ஞானம் கூடிய வாழ்வு.

"திருவடியாம் உயர்வாழ்வுற—இனிதாள்வாய்" (திருப்புகழ்). உயர்வரிய வாழ்வு என்பது பொய்க்குடில் குலாவி புத்தி சலியாத வாழ்வு. திருவடி ஞான வாழ்வு சத்குரு சரணாரவிந்தத்தில் அன்பு பூண்டொழுகும் வாழ்வு. குரு சரண அன்பு ஏற்பட, குரு அருள் அவசியம். குரு அருள் ஏற்பட அடியார் திருக்கூட்டம் அல்லது சாது சங்கம் அவசியம்.

பொய்க்குடில் குலாவும் வாழ்வு, ஒரு பொழுதும் சத்குரு சரணாரவிந்தத்தில் அன்பு அல்லது நேசம் பூண்டொழுகாமல் வாழும் வாழ்வு.

"உயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே" (திருப்புகழ்.) ஆக சுய இச்சையுடன் கூடிய சத்சங்க வாழ்வு உயர் வாழ்வு என்றும், விஷய இச்சையுடன் கூடிய துற்சங்க வாழ்வு உயர்வரிய வாழ்வு என்றும் கூறலாகும்.

(1) பாழ் வாழ்வு எனப்படும் மாயையில் விழாமலிருக்கும் பொருட்டு, அடியார் திருக்கூட்டத்தில், அநுபூதி மண்டபத்தில் இறைவன் பணியாகிய குரு பஜனம் செய்து அடியாருடன் கலந்து மகிழ்ந்து சுவாநுபூதி அடையும் சாதனத்தை, ஞான பூமியில் சுபேச்சை எனப்படும்.

"ஆரணத்தினுர் வாழ்வே நமோநம"
"திசையினு மிசையினும் வாழ்வே நமோநம"
"அன்பாரடியார் மகிழ் பெருவாழ்வே"

(திருப்புகழ்)

உருக்கம் பூடவந்த தமிழ்மறையில் ஊறஅருள்
எருக்கத்தம் புலியூர் எந்தாயென் றேத்துவனே

(2) மேற்படி ஏற்பட்ட இச்சையின் விளைவாய் அடியார் திருக்கூட்டத்தில் அடிக்கடி தக்க பெரியோர்களைக் கொண்டு நூலாராய்ச்சிகளும், "சிவன் வாழ்வே", "உமை வாழ்வே", "அருள் வாழ்வே" என்றும் பஜனம் செய்தல்களும், வாழ்வின் சிறந்த உபயோகமாகிய ஆத்ம ஞான ஆனந்த அநுபவமாகிய சுவாநுபூதி அடையும் சாதனத்தை, ஞான பூமியில் விசாரணை எனப்படும்.

"மதுர ஞான விநோதா நாதா
உனது காவிய நூலாராய் வேன்
இடர்படா தருள்வாழ்வே நீயே—தரவேணும்"

(திருப்புகழ்)

(3) மேற்படி விசாரணையின் விளைவாய் மனமானது, சாது சங்க சகவாசத்தினுல் சிரவணாதிகள் முதலியவைகளால் ஒருமைப்பட்டு, சத்குருநாதனை தரிசனம் செய்ய வேண்டுமென்று பேராற்றல் கொண்டு, நாடா பிறப்பு முடியாதோ? புலிசை வாழ்வே! எனக்கும் எதிர் வரவேணும் என்று அடியார் திருக்கூட்டத்தில் கலந்து பஜனம் செய்து வரும் சாதனத்தை ஞான பூமியில் தனுமானசி எனப்படும்.

இயல் இசையின் முத்தமிழர் பெருவாழ்வே
அநுபூதி ரதகிலேதனைத் தருவாயே (திருப்புகழ்)

(4) மேற்படி தனுமானசியின் விளைவாய் சத்குருநாதனை "செந்தில் வாழ்வே, மயில் வாழ்வே" என்று கூவிக் கூவி அடியாருடன் கலந்து மகிழ்ந்து பஜனம் செய்யும் இறைவன் வழிபாடு பெற, ஏற்படும் பயபக்தியுடன் கூடிய சாதனத்தை ஞான பூமியில் சத்துவாபத்தி எனப்படும்.

தினையூர் அளவின்ப இவ்வுலகில் தேயாமல்,
தினையூர்த் திருவாளா! திருநோக்கம் செய்யாயே

"நோய் கலந்த வாழ்வுறாமல், நீகலந்து ளாகுஞான
நூலடங்க வோத வாழ்வு—தருவாயே" (திருப்புகழ்)

(5) மேற்படி சத்துவாபத்தியின் விளைவாய், அடியார் திருக்கூட்டத்தில் சத்குருநாதனை வாழியென மறவாது பரவில், சரண வாரிசமளிக்கும் உபகாரக்காரனாகிய வேளைக்காரனாய் விளங்கும் குரு அருள் ஏற்பட்டு, தன்னிடத்தில் குடிகொண்டு வரும் தீய குணங்கள் சிறிது சிறிதாக நழுவப் பெற்று குரு அருள் கனவிலும் நனவிலும் மறவேனே என்று பஜனம் செய்து வரும் சாதனத்தை ஞான பூமியில் அசம்சத்தி எனப்படும்.

(6) மேற்படி அசம்சத்தியின் விளைவாய் சாது சங்க உணர்வினால் பூர்வ விஷய வாசனையினின்று மனமானது ஒடுங்கப் பெற்று, இடைவிடாது குருநாதனை சிந்தனை செய்து ஆத்ம ஞான ஆனந்த நிலையில் நிற்க நிற்கும் குணமாகிய குருநாதன் பஜனமாகிய சாதனத்தை ஞான, பூமியில் பதார்த்த அபாவனை எனப்படும்.

(7) மேற்கூறிய ஆறு வகை சாதனத்தின் விளைவாய், மனமானது சுவானுபூதி அடைந்து மனச் சாந்தியுடன் கூடிய வாழ்வே துரியநிலை என்று ஞான பூமியில் சிறந்ததாக கூறப்படும்.

"வாழ்வே துரியநிலையே கண்டமுத்தர் இதயாகமல
மதனில் விளையாநின்ற அற்புதசுபோத சுகம்"
(திருப்புகழ்)

ஆக வாழ்வு என்பது ஆனந்த நிலை. (ஆனந்த நிலையில் மனம் பொருந்த அடியார் திருக்கூட்டம் மூலகாரணம்.) அடியார் திருக்கூட்டத்தில் பஜனம், அநுபூதி பாராயணம் முதலிய பணியே வாழ்வின் சிறந்த சாதனம்.

கோபுரத்தை நோக்கிக் கும்பிட்டே உய்திபெறச்
சோபுரவூர்ச் செம்மால்! சோர்வகற்றி ஆளாயோ

பக்தியின் சக்தி

(தொடர்ச்சி)

6. அப்பூதியடிகள்

(ஆ. கி. ரங்கராஜன்)

நமக்கு மற்றொரு செய்தியை அறிவிக்கின்றது, பக்தியின் சக்தி. இதர சக்திகள் ஆற்றாத செயல்களை அது எளிதில் முடிக்கிறது. விந்தையான விவகாரங்களை விசித்திரமாகப் புரிகிறது. இப்பகுதியின் சக்தி பண்பட்டவர்க்கு மிகவும் பலனைத் தருகிறது. மற்றவர்க்கு அது உதவி புரிகிறது.

பக்தி செய்தல் பரமனை மட்டும்தான் என்பதல்ல. பரமனின் அடியார்களை பூஜித்தலும் உபசரித்தலும் கூட பரமனை மகிழ்விப்பதாகும். பரமனைப் பணியாவிடினும் அவனது அடியார்களை ஆதரித்தலால் ஆண்டவன் ஆனந்தமடைந்து அவர்கள் பால் அநுக்ரஹம் புரிகிறான். அதற்கு இதோ சான்று.

சோலைகள் நிறைந்த சோழவள நாட்டின்கண் மிகச் சிறந்த தலமாகிய திங்களூரில் அந்தணப் பெரியார் ஒருவர் தோன்றினார். அப்பூதி அடிகள் என்பது அவரது இயற் பெயர். இறைவனது திருக்கடாக்ஷத்தின் மகிமையால் அவர் எச் செல்வங்களையும் நிரம்பப் பெற்று எந்த நேரத்திலும் இறைவனை தியானிப்பதிலும் இறைவனடியாரை உபசரிப்பதிலும் ஈடு இணையற்றவராய்த் திகழ்ந்தார்.

கண்ணுதலோன் கருணையால் கற்றூணில் பிணைக்கப் பட்டுக் கடலில் எறியப்பட்டு அப்பாறையையே புணையாகக் கொண்டு நீந்திக் கரையேறிய மாபெரும் தொண்ட

அதிகைப் பதிக்கே அழைத்தியோ? அல்லதுபொய்
அதிகைதரும் இவ்வுலகில் ஆக்குதியோ? அம்மானே

ராம் திருநாவுக்கரசு சுவாமிகளின் பெயரால் ஆங்காங்கு நீர் நிலைகளையும் அறச்சாலைகளையும் விடுதிகளையும் நிறுவி அவைகள் நாடோறும் சிறக்க விளங்கும்படிச் செய்து வந்தார். அவரது கொடைத் தன்மைக் கேற்ப பொருளும் அவரிடம் நிறைந்து நின்றது.

நாவரசரைக் காண அவர் நாட்டங் கொண்டார். "உன் நாமமே உச்சரித்திடும் அடியர் நாமமே நான் உச்சரிக்க வசமோ?" எனத் தாயுமானார் இரங்குவது போல், தாமும் ஒரு பக்தரே என அகந்தையுறாமல், தம்மை விடப் பன் மடங்கு உயர்ந்தவரெனச் சிவநேசச் செல்வராம் அப்பர் சுவாமிகளைக் கருதி, என்று அவரைச் சந்திக்க சந்தர்ப்பம்-வாய்க்குமோ? என மிக ஆர்வத்துடன் எதிர் நோக்கி நின்றார்.

இவ்வாறிருக்கையில் இறைவனின் இணையற்ற அன்பராகிய திருநாவுக்கரசர், திருப்பதிகளிற் சிறந்த திருப்பழன க்ஷேத்திரத்தின் வழியாக வந்து கொண்டிருக்கும் போது, வழியிலே 'திருநாவுக்கரசு சுவாமிகளின் தண்ணீர் பந்தல்" என்று எழுதப்பட்டிருந்ததோர் விடுதியைக் கண்டு அதிசயித்து அங்கிருந்தோரை விசாரிக்க, அவர்கள் "இவ் விடுதியை அமைத்தவர் இவ்வூர் வாசிதான். பெருந் தன வந்தர்! சிறந்த பக்தர்! அவர் இதைத் தவிர பூங்காவனங் களும், தர்மசாலைகளும் மற்றும் பலவும் நிர்மாணித்து அவற்றிற்கெல்லாம் இப்பெயரையே சூட்டியுள்ளார்! அவர் அடியார்களிடத்து அபார அன்பு பூண்டுள்ளார். அதோடு தமது வீட்டிலுள்ளவர்களையும் தமது புத்திரர்களை யும் இப்பெயரையே இட்டு அழைக்கின்றார். இப்போது தான் இவ்விடமிருந்துவிட்டு இல்லத்திற்குச் சென்றுள் ளார்" எனக் கூறித், "தாங்கள் இங்கு உணவு கொண்டு

நாவலூரரில் உயர்வு நாட்டும் நினைக் காண
ஆவலூர் கின்றதுவே, அமலா! அமலாவோ!

இளைப்பாறுங்கள் நாங்கள் அவரை அழைத்து வருகிறோம்" என்றனர். அப்பர் மகிழ்ந்து "இத்தகைய அன்பரும் இத்தலத்தில் உளரோ? ஆயின் அவர் திருநாமம் யாதோ? என வினவ, அவர்கள் "அப்பெரியாரின் பெயர் அப்பூதி யார்? எனக்கூற, அப்பரும் மனம் கனிந்து " அப்படியாயின் யான் அவரை அவரில்லத்திலேயே சென்று சேவிப்பேன்" என்று உரைத்து அப்பூதியாரின் வீடு நோக்கி விரைந்தார்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு —திருக்குறள்.

(தம் வீட்டுக்கு வந்து செல்லும் விருந்தினரை, அதிதி களை அன்பர்களை ஆதரித்துப் பின்னும் எவரேனும் வரு கின்றனரா என்று ஆவலுடன் எதிர்நோக்கும் உத்தமனை அமரர்கள் உயர்ந்த வரவேற்பளித்து நல்ல விருந்தினராக கௌரவித்து உபசரிப்பர்) என்ற பொதுமறை விதியின் படி, விருந்தினரை உபசரிப்பதையே தம் தொழிலாகக் கருதிய அப்பூதியார், எவரோ ஒரு சிவனடியார் வந்து வாச லில் நின்று தம்மை அழைக்கிறார் எனக் கேள்வியுற்று உடனே சென்று எதிர்கொண்டார்.

அப்பர் "தாங்கள்தான் அப்பூதி என்னும் பெரி யாரோ?" என்று பணிவுடன் கேட்க, அவரும் "ஆம் ஸ்வாமீ! அடியேன்தான் அப் பெயருடையவன்" என்று உரைத்தார். அப்பரும் "அடியேனுக் கொரு ஐயமெழுந் துள்ளது. கேட்கலாமோ?" என்று வினவ,

அப்பூதியார்:—எது வேண்டுமாயினும் கேளுங்கள். அடியேனால் முடியுமாயின் பதில் பகருகிறேன்.

அப்பர்:—தாங்கள் செய்யும் தர்மங்கள் அளவற்றன! தங்களால் உய்பவர் அளவற்றோர். இறைவனின் பரிபூரண

பெருமுதுகு கூனி பேதை துயரடைய
திருமுதுகுன் றத்துறையும் துரையென்னைக் கைவிடுமோ

அன்புக்குப் பாத்திரராகிய தாங்கள், நிருமித் துள்ள அறச்சாலைகட்கும், பிறவற்றிற்கும் தங்களின் பெயரை இடாமல் மற்றொருவரின் பெயரைச் சூட்டியுள்ள தைப் பார்க்க எனக்கு ஆச்சரியமா யுள்ளது! அதன் காரண மென்ன?

அப்பூதியார் :—அறிவற்ற உரை பகருகின்றீர்! இனி யொருமுறை இவ்வாறு கூறற்க! சைவம் தழைக்கத் தோன்றிய வள்ளலன்றோ திருநாவுக்கரசுப் பெருமான்! பகைவர்கள் பிணைத்த பாறையையே புணையாகக் கொண்டு பயங்கர சாகரத்தைக் கடந்தேறிய பரம பக்தராகிய அவ ரது திருநாமத்தை உரைக்கவும் உமக்கு உசிதமாகுமோ? அப் பெரியாரின் இனிய புகழை அறியாத நீர் யாவர்?

அப்பர் :—சகோதரியாரான திலகவதியாரின் விருப் பத்திற் கிணங்கப் பரமனால் சூலைநோய் வாய்ப்பட்டு சீர் திருந்தப் பெற்றதோர் புன்மையேன் நான்! இச் சண்டாள னின் முற்பெயர் 'மருள் நீக்கி' என்பதாகும்!

அப்பூதியார் இவ் வார்த்தையைக் கேட்டதும் மட் டற்ற மகிழ்ச்சிக் கடலில் அமிழ்ந்தார். அப்பரின் பாதங் களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். ஆனந்த பாஷ்பம் சோர, அவரை வணங்கி, உள்ளம் நெகிழ "ஸ்வாமீ! யான் தேவ ரீரை அறியாது ஏதேதோ கூறிவிட்டேன்! தேவரீரை என் றேனும் காணுதற் குபாயம் ஈதென்றறிந்தே இப்பெயரை எவற்றிற்கும் சூட்டினேன். தேவரீரால் வலிய வந்து ஆட்கொள்ளப் பெற்றேன். பிறவிப் பயனை அடைந் தேன்!" என்று கூறி உள்ளே அழைத்துச் சென்றார். அங்கோரிடத்தில் ஆசன முதலியன அளித்து அப்பரை அமர்த்திவிட்டுத் தம் மனைவியாரிடமும், மக்களிடமும்,

---

நல்வெண்ணெய்க் கண்ணன் நாளும் தொழுதேத்தும்
நெல்வெண்ணெய் ஊராய்! கைவிடல்நீ நீதியதோ

இதர பந்துக்கள், நண்பர்கள் அனைவரிடமும் திருநாவுக்கரசர் தம் வீட்டுக்கு விஜயம் செய்துள்ளார் என அறிவித்தார். அனைவரும் வந்து அப்பரின் அடிமலரை வணங்கி ஆசி பெற்றனர்.

பின்னர் அப்பூதியார் தமது மூத்த மைந்தனாகிய மூத்த திருநாவுக்கரசரை அழைத்து நீசென்று சீக்கிரமாக வாழை இலைக் குருத்து ஒன்று அரிந்து வா! சுவாமிகட்கு அமுது பரிமாறவேண்டும் எனக்கூறி அனுப்பினார்.

அச் சிறுவன் தந்தையின் கட்டளைப்படி சென்று வாழை மரத்தில் ஓர் இலையைக் கொய்தனன். இறைவனின் திருவிளையாடலால் நாக சர்ப்பம் ஒன்று அவனைத் தீண்டியது. திகிலடைந்த அவன் அவசரமாக ஓடி வாழை இலையைத் தாயிடம் அளித்துவிட்டு விஷம் ஏறிவிட்டபடியால் விழுந்து மாய்ந்தனன்.

திடுக்கிட்ட சதிபதிகள் மைந்தனைப் பாயில் சுருட்டி முற்றத்தில் மறைத்து வைத்துவிட்டு திருநாவுக்கரசரிடம் சென்று அமுதுண்ண அழைத்தனர். திருநாவுக்கரசரும் கைகால்கள் அலம்பிக்கொண்டு திருநீறணிய அனைவரையும் அழைக்க அனைவரும் அவரருகே பணிவுடன் சென்றனர். அப்பர் அப்பூதியாரை நோக்கி "உமது மூத்த மைந்தனை அழையுங்கள்" என்றுகூற, அப்பூதியார் "இந்நேரம் அவன் எதற்கும் உதவான்!" என்றார்.

அப்பர் சற்று திகைத்து "அவன் என்ன தவறு செய்தான்? அவனால் என்ன நேர்ந்தது? உண்மையை ஒளியாமல் கூறுங்கள்!" எனக் கேட்டனர். அப்பூதியார் வேறு வழியின்றி நடந்த விஷயத்தைக் கூற, அப்பர் அவர்கள் மேல் அனுதாபமுற்று, மைந்தனது சவத்தை ஆலயத்திற்குக்

**கோவலூர் மேயகுணக் குன்றே! நின் தாள்சாரும்
ஆவலூர்ந் தென்னுளம் அதிர்தல் அறிந்திலையோ!**

கொணரச் செய்து திருப்பதிகம் பாட, இறைவனும் அக மகிழ்ந்து சிறுவன் உயிர்பெறச் செய்தனன்.

பக்தியின் சக்தியால் பாலகனை மீட்ட அப்பரின் மேன்மையை அப்பூதியார் உணர்ந்தாராயினும், அச்சிறுவனால் அடியார் அமுதுண்பது தடைபட்டதே என்று சிந்தை நொந்தார். அப்பரும் சிலநாள் அப்பூதியாருடன் தங்கி ஆசிர்வதித்து திருப்பழன மேகினர்.

அப்பூதியாரின் புகழ் இந் நிகழ்ச்சியால் மிகவும் உயர்ந்து பிரசித்தி அடைந்தது. இறைவனருளால் அவரது திரவியம் பெருகியது. அடியாரை ஆதரித்தல் என்னும் அரும்பணியால் ஆண்டவனின் அனுக்ரகம் பெற்று இறுதியில் அழியா இன்பமாகிய முக்தியை எய்தினர்.

பக்தியின் சக்தியால் பாரகம் உயர்க !

திரிசிராப்பள்ளித் திருப்புகழ்

விரிவுரை

(குகஸ்ரீ)

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்து நாதம்;
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கிற தானது
லோகத்துக் காதி யானது கண்டு நாயேன்

பிறையணிநல் சடையாளா! பெருகுங்கங் காதரனே
அறையணிநல் லூராய்! அடியேனை ஆளுதியோ

யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும   யங்கலாமோ;

ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமயல்
ஆகிப்பொன் பாத மேபணி   கந்தவேளே

ஆலித்துச் சேல்கள் பாய்வயல்
ஊரத்திற் காள மோடடர்
ஆரத்தைப் பூண்ம யூரது   ரங்கவீரா;

நாசிக்குள் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதெனு   நின்றநாதா

நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்சி ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர்   தம்பிரானே.

(ஆசை முதல் வேளே என்பது வரை.)

(பதவுரை.) ஆசைப்பட்டு ஏனல் காவல் செய் வேடிச்சிக் காக—(காக்கும்) வேட்கை மிகுந்து தினைப்புனத்தைக் காத்தல் (கைங்கர்யம்) செய்திருந்த வேடர் மகளான வள்ளியம்மை விஷயமாக;

மா மயல் ஆகி - அளவிறந்த மையல் உடையவன்போல் வெளிப்பட்டு;

பொன் பாதமே பணி கந்த வேளே - (அவளுடைய) அழகிய திருவடிகளை இடையறாது (விநயம் வெளிப்பட) வணங்கும் அருள் மணத் தெய்வமே!;

ஆலித்துச் சேல்கள் பாய் வயலூரத்தில் - (பரம) களிப்புடன் சேல் மீன்கள் பாய்கின்ற (நீர்வளமுடைய) வயலூரில்;

காளமோடு அடர் ஆரத்தைப் பூண் மயூர துரங்க வீரா—(பயங்கர) விடத்தொடு பொருந்திய பாம்பை மாலையாகப் புனைந்த மயிலாகிய பரிமேல் வரும் மாபெரும் வீரனே;

கொடையாற்றிப் பல்லோரைக் குணமணிக ளாச்செய்த
இடையூற்றூர் வாழ்வே! எனையேன்று கொள்ளுதியோ

(நாசிக்குள்......நாதா.)

நாசிக்குள் ப்ராண வாயுவை ரேசித்து எட்டாத யோகிகள் - மூக்குள் (அடங்கும்) பிராணன் ஆன சுவாசத்தை வெளியிட்டு, (மீட்டும் ஈர்த்து முயன்று, ஆயிர இதழ்க் கமலமான வெளியை மேலேறி) எட்டிப் பிடிக்க முடியாத அசட்டு யோகிகள்;

நாடிற்று காண்ஒணாது என நின்ற நாதா - (பலகாலமாகத்) தேடிய பரம் பொருள், பார்த்தற்கு அரியது என்று பகரும்படி யிருந்த நாத சொரூபனே;

(நாகத்துத்......தம்பிரானே.)

நாகத்துச் சாகை போய் உயர் மேகத்தைச் சேர் சிராமலை - மரங்களின் கிளைகள் சென்று உயர்ந்த மேக மண்டலத்தை அளாவிய திரிசிர கிரியில் எழுந்தருளிய;

நாதர்க்குச் சாமியே சுரர் தம்பிரானே - எவர்க்கும் தலைவரான சிவனார் பெற்ற செல்வமே! தேவர்கள் தம் பெருமானே!;

(வாசித்துப்——பேசொணாதது.)

வாசித்துக் காண ஒணாதது - கற்கும் நூல் அறிவால் காண முடியாதது;

பூசித்துக் கூட ஒணாதது - புற வழிபாடு செய்து, (அதன் மூலம்) அடைதற்கு அரியது;

வாய்விட்டுப் பேச ஒணாதது - துணிந்த வாக்கால் (இத்தகையது என்று) சொல்ல இயலாதது;

(நெஞ்சினாலே......குழொணாதது.)

நெஞ்சினாலே மாசர்க்குத் தோண ஒணாதது - (மும்மல) அழுக்கால் மூடுண்டவர்க்கு மன நினைவில் புலனாக மாட்டாதது;

நேசர்க்குப் போ ஒணாதது - அன்பினர்க்கு (நீங்கிப்) புறம் போக அறியாதது;

வெண்ணெய்நல்லூர் அருள்துறையின் வேந்தேநின் பாதம்யான்
கண்ணநீ ராட்டிடவும், காட்டாய்நீ காட்டாயே!

மாயைக்கு சூழ் ஒணுதது - பிரகிருதி மாயையால் முற்றுகை யிட முடியாதது;

(விந்து......ஆதியானது.)

விந்து நாத ஓசைக்குத் தூரம் ஆனது - விந்து தத்துவம் எனும் ஒளி வட்டத்திற்கும், (தத்துவங்களின் முடிவான) நாதத் திற்கும், (உலக கலகலப்பான) ஓசைக்கும் வெகு தூரத்தில் விளங்குவது;

மாகத்துக்கு ஈறது ஆனது - விண்ணிற்கு முடிவில் விளங்கு வது;

லோகத்துக்கு ஆதி ஆனது கண்டு நாயேன் - உலகிற்கு முதன் மையானது (எதுவோ அதை,) கடைப்பட்ட அடியேன் கண்டு;

(யோக......மயங்கலாமோ,)

யோகத்தைச் சேரும் ஆறு மெய்ஞ் ஞானத்தைப் போதியாய் - சிவராஜ யோகத்தை மேற்கொள்ளும்படி, சிவஞான போதத்தைச் செய்தருள்வீராக; இனி ஊனத்தைப் போடிடாது மயங்கல் ஆமோ - இனியும் உடல்மேல் வைத்த பற்றை ஒழிக்காமல் யான் மயங்கி யிருப்பது மரபாமோ;

விளக்கம்

பெரும் பைம்புனம் இப்பேருலகம். இதனில் உள்ள சிற்றே னல்கள் ஜீவர்கள். இக் கருத்தை, நுட்பமாக அறிவிக்கிறது கந்தர் அலங்காரம். உயர்தரு பூமியில் வாழ்ந்து வளம்பெற, உயிர்க ளாகிய தினைகளைக் கண்ணும் கருத்துமாக வள்ளியார் காத்து வருகிறார். ஆன்ம இனத்தைக் காத்தற்கு அறிகுறியாக, தினைப் புனம் காக்கும் தெய்வ வள்ளி மேல், வேட்கை மிகுந்து வீழ்ந்து வணங்குகிறான் வேல் முருகன். இது மோக தாகமென்கிறது மூட மதி. கொடை நடை கண்ட குதூகலம் என்று, குறிப்புணர்த்து கின்றார் மேலோர்கள்.

வாழ்விக்கும் பக்குவத்தை வள்ளியம்மை வழங்குகிறார்; அவ் வழியில் கனிந்த உயிர்கட்கு ஞான மணம் காட்டி, வீட்டு நெறி கூட்டும் வேல் பெருமானை, வீறிட்டு அழைக்கிறது ஐந்தாவது வரி. இப்பகுதியை ஓதும்போதே உள்ளம் உருகுகிறதே!

முறையூர் மொழிகள்பல முறையாகச் சொல்லவைத்த
துறையூர்த் துரை! நின் தொன்மையருள் வாழியரோ

வளம் பல நிறைந்தது வயலூர். வரப்புயர்ந்து நீர் உயர்ந்த வயல்களில், உவகை மிகுந்து,சிறக்கப் பாய்கின்றன சேல் மீன்கள். வயலூர் - அமைதி நிலம்; பாயும் சேல்கள் பரம ஞானிகள்; இஃது உய்த்துணர் வைப்பு என்பதும் ஒருவகை. இது, கடவுள் அனுபவம் கண்ட களி நிலே. வயலூரத்து என்பதில், அத்து - சாரியை'

பரிக்ரக சக்தியைப் பாம்பு என்ருர்; அணியாகக் குண்டலினியைக் கால் கீழ் அடக்கி ஆளும் விந்து தத்துவம், புறத்தில் மயிலாகிப் பொலிகிறது; உலகை யெலாம் அடக்கி யாளும் ஓங்கார மயிலே, ஊர்தியாக்கி நடத்தும் வீர விஜய விமலா! என்று விளிக்கிறது ஆருவது வரி.

கொல்லன் உலேக்களத்துத் துருத்திபோல், சுத்த காற்றை நாசி வழி யீர்த்து, மூலாதாரத்தில் பாய்ச்சி, பிரம கபாலம்வரை பெருக நிறுத்தி, அரும்பாடு படுகின்ருர் யூகம் இல்லாத யோகிகள். அறிந்திலம் இதுவரை என்று வருந்தும் அவர்களிடத்தில், நாதானுபவமாகி நடமாடுபவன் நம்பன் என்பது, ஏழாம் அடியில் இருக்கின்ற செய்தி.

ஓசை ஒலியெலாம் அடங்கும் இடம் ஆகாயம்; வானளாவிய திரிசிரா மலேமேல், தற்பர நாதமாயுள்ள தாயுமானவர். அவர்க்குக் குருவான குமரனே, நாதர் சாமியே என்று கூவியழைத்தார்.

'எந்தை பிரானுக்கு அங்கு இரு மூன்று வட்டமாய்,
தந்தைதன் முன்னே, சண்முகம் தோன்றலால்,
கந்தன் சுவாமி, கலந்து அங்கு இருத்தலால்,
மைந்தன் இவன் என்று மாட்டிக் கொள்ளீரே!'

என்ற திருமந்திர நுட்பம், இங்கு எண்ணத் தகும்.

தனக்குமேல் ஒரு தலேவன் இலானேத் தம்பிரான் என்ருர்; மற்று, தம்பிரான்—(பிரியக் கொண்ட உயிரின் உணர்வைப் பிரிய அறியாத) ஆன்ம நாதன் எனலும் ஒருவகை. நியதியாக இவைகளே நினேவார் நெஞ்சம் நெகிழ்தலும்.

'வாதமும் சமய பேதமும் கடந்த
மனேலய இன்ப சாகரமே!
ஏதும் ஒன்றறியேன்; யாதும் நின் செயலே;
இறைவனே! ஏக நாயகனே!'

வடுவூரும் வாழ்க்கை முன்வினையால் வந்ததென
வடுவூர்வாழ் வேதமுதல் வந்துணர்வில் ஓதியதே

என்றார் பட்டினத்தடிகள்.

'இப்படியன் இவ்வுருவன் இவ்வணத்தன்
இவன் இறைவன் என்(று) எழுதிக் காட்டொணாதே'

என்கிறார் அப்பரடிகள்.

இவைகளின் மூலம் கடவுள் சொரூபமும், அது எண்ணில் எழுத்தில் அடங்காதது எனவும், எல்லாம் அதன் செயல்களே எனவேயும் ஒருவாறு உணர்கிறது நம் உள்ளம்.

இந்நிலையினை, பிரகிருதி உடலில் இருக்கும் உயிர்கள், யுக்தி மூலம் கொண்டு ஓத முயல்வது, உணர்த்த நினைவது, நரி வால் கொண்டு கடலாழம் காண முயன்ற கதையாக முடியும்.

வளர்ந்த நூல் அறிவால், அபர ஞானம் வரும். இதைப் பாச ஞானம் என்பதும் உண்டு. கட்டுப் பட்ட இந்த அறிவால், நூல்களை வகை தொகை தோன்ற விரித்து வாசிக்கலாம்.

"நோக்கினும் நுழைகிலை; நுவலுகின்றதோர்
வாக்கினும் அமைகிலை; மதிப்ப ஒண்கிலை;
நீக்கரும் நிலைமையில் நிற்றி; எந்தை! நீ
ஆக்கிய மாயம் ஈது, அறிகிலேமரோ"

என்று, வானோர் கந்தபுராணத்தில் வழுத்துவது அறிவோம்.

'காண ஒணாதது; உருவோ(டு) அருவது;
பேச ஒணாதது; உரையே தருவது
காணும் நான்மறை முடிவாய் விளைவது'

என, எதிர்மறையும் உடன்பாடுமான அத்தெய்வ இயல்பை, வாசித்த நூலறிவால் ஒருவாறு கருதலாம்; எனினும், கடவுள் சொருபத்தை அவர்களால் காண்பதோ ஆவதில்லை. ஆம். அவ்வளவுதான் செய்தி. அதனால்தான், வாசித்துக் காணொணாதது என்றார்.

வாசித்துக் காண இயலாத தெய்வத்தை, பூசிக்கலாம் என்கிறது புந்தி. புற வழிபாடு வரவர வளர்ந்து, இதயார்ச்சனம் எனும் அக வழி பாடாக அமையுமேல், முத்தி நிச்சயம் சித்திக்கும்.

கருமாணிக் குழிகள்பல காணவைத்த கன்மமென
திருமாணிக் குழியிறைவன் தெளிவளித்தால்ஆகாதோ

அங்ஙனமின்றி என்றும் புறவழிபாடே ஆயின், அது உயர்குடிப் பிறப்பும் போகமுமாகி ஒழியும். அதனால், அருமை உயிர்கள், என்றும் பரத்திற்கு அயலாய் இருந்துவிடுகின்றன.

'அண்ணல் ஐம்முகங்களும் அருளும் ஆகம
நண்ணிய விதிமுறை நன்கு செய்யினும்,
எண்ணரும் அன்புளத்து இல்லையே யெனில்
பண்ணிய பூசனை பயன் தராதரோ'

எனும் பிரபுலிங்க லீலையை, இங்கு எண்ணல் நலம் தரும். இவைகளை எண்ணியே, **பூசித்துக் கூட ஒணுதது** என்ருர்.

அமலன், 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்'; அவன் சொருபத்தை, வாய் திறந்து வரையறுத்து உரைப்பது, வாசாகைங்கர்யம்; ஆதலால் **பேசொணுதது** என்கிருர்.

கெட்ட எண்ணம்; கேடு கெட்ட புத்தி, வம்பு வழக்கு, பொருமை, பொச்சரிப்பு முதலிய மாசடைந்த மனத்தில், களங்க ரகிதன் காட்சி யாவது இல்லை. ஆதலின், **மாசர்க்குத் தோண ஒணுதது** என்ருர்.

'பத்தியாய் உணர்வோர் அருளை வாய்மடுத்து,
பருகுதோறு அமுதம்ஒத்து, அவர்க்கே
தித்தியா இருக்கும்' என்று திருவிசைப்பா குறித்தபடி,

அன்பரை அகலாதது அப்பரஞ் சுடர் எனலையும் அறிகிருேம். ஆதலின், **நேசர்க்குப் பேரஒணுதது** என்ருர்.

மாயை இம்மாநிலத்தில் வந்தாள். பிரபுவைப் பிடிக்க நினைத் தாள். விண்ணைக் குத்திக் கையிளைப்பவர் போல், கலங்கி நின்றது தான் கண்ட பலன். இதையும் எண்ணி, மாயாதீதன் தத்வாதீதன் அவன், பூதாகாயம் கடந்த ஞான ஆகாயன் எனலை, **'மாகத் துக்கு ஈறதானது'** என்பதில் விவரித்தார்.

உலகிற்கு ஆதி மாயை; அதற்கும் ஆதி அமலன் ஆதலின், **லோகத்திற்கு ஆதியானது** என்ருர்.

அறிவித்தால் அன்றி அறியா உளங்கள்

என்பது மெய்ஞ்ஞான போதம்.

**திருப்பா திரிபனைத்தும்; தேர்ந்துதெளி வுறுகென்னத்
திருப்பா திரிப்புலியூர்த் தெய்வஞ்சொல் கின்றதுவே**

'உருவன்(று) அருவன்(று) உளதன்(று) இலதன்று;
இருளன்(று,) ஒளியன்(று) என நின்றதுவே'

எனும் அருளார்ந்த அந்த அறுமுகத்தைக் காண வேண்டுமேல், கருத வேண்டுமேல், அவனேதான் தன்னை அறிவிக்க வேண்டும் என்பர் ஆன்றோர்.

உடம்பைத் தொடர்கிறது நிழல். அதுபோல், உயிரில் போதாகாயம் உளது; போதாகாசத்தில் இருந்து மடங்கி எழுகிறது மனம். உறுத்தெழும் அவ்விரண்டும் ஒடுங்க, அரிய ஞான அருள் வெளியில், செயல் கெட நிற்கும் சீவான்மா. சிறந்த இதுதான் சித்தாந்தம்.

'ஏகம், இரண்டு என்னாமல், சும்மா இரு'

என்று ஓதுகிறது, ஒழிவிலொடுக்கம். இந்நிலையில்,

'ஆகத்து ளேமகிழ்ந்த சோதிப்ரகாச இன்பம்,
ஆவிக்குளே துலங்க அருள்வாயே!'

என்பது, இங்குள அனுபவ இன்பம்.

யோகம் இலாத ஞானமும், ஞானமிலாத யோகமும், தற்பர வீடு பேறு தாராது.

முருகா! ஊனமானது இவ்வுடல்; அந்த பந்தம் அழியாயா; எத்தனை நாட்கு இதைச் சுமக்க வேண்டுமோ என்பார், ஊனத் தைப் போடிடாது—மயங்கல் ஆமோ என்றார்.

ஏகாந்த இடம். அங்கு உயர்ந்த ஒரு பீடம். அதன் மேல் அமர்ந்து, காமக் குரோதாதிகள் என்னத் தாவும் விஷயாதிகளைத் தடுத்து நிறுத்தினால், அரிய பிராணன் அடங்கும். அந்நிலையில், இதய எம்மானை எண்ணுவம்; பறந்தோடும் பாவங்கள். எவ்வெம் முகமாகவோ எம்பெருமான் எழுந்தருள்வன்!

யோகத்தைச் சேருமாறு, மெய்ஞ்
ஞானத்தைப் போதியாய்; இனி
ஊனத்தைப் போடிடாது—மயங்கலாமோ

என்று விண்ணப்பம் செய்வம். அத்தருமதுரை உரியதை அருளும்; உய்தி பெறுவம்; வாழ இதுதான் வழி.

வாழ்க திருப்புகழ்

அண்டினது எதையெதனை அந்தமயம் ஆவைஎன
முண்டச் சரத்தாய்நீ முன்வந்து கூறுயோ

மதிப்புரை

சங்கமிருந்து தமிழாராய்ந்த தக்கோர் வாழ்ந்த தண டமிழ்ப் பாண்டி வளநாட்டில் தோன்றித் தமிழகம் செய்த தவப் பயனாக நந்தம் தொண்டை நன்னாட்டுத் திருவான் மியூர் மயூரபுரியில் சமாதி நிலை கொண்டருளியுள்ளவர் பழுத்த மனத்தவர் மெச்சும் **பாம்பன் அடிகளாவர்.** அவர்களது திருவாக்கு, சுப்பிரமணியத்தையன்றி எப்பிரமமும் இல்லையென்றே கூறும். அவரது சென்னி, செவ்வேட் கன்றி வணங்காது. அவரது இதயம் குகனையன்றி வேறு கடவுள் மூர்த்தங்களை எண்ணாது. இங்ஙன் மறந்தும் புறந் தொழா மாதவராய் எழுந்தருளிய அடிகளார் அருளிய சாத்திர தோத்திரக் காவிய வகைகள் கணக்கில. அவற்றுள் மந்திர மறையாய்ப் பாடுவார் பகை களைந்து, பசி நீக்கி, பிணி மாற்றும் பேருதவி செய்வது **சண்முக கவசம்** என்னும் ஒப்புயர்வற்ற தனி நூலாகும்.

இதனைப் பக்தி பிறங்கப் பாடுநர், தினமும் **ஆறு முறையேனும்** கவிக்கொரு கற்பூர தீபமேற்றிப் **பாடுக. இடையில் எவருடனும் பேசுதலும், ஒன்றை விட்டு வேறொரு பாடலைப் படித்தலும் கூடா.** இவை "மந்திர மாறுபாடு போல விபரீதமாகலின்" என்று பத்தியம் வகுத்துள்ளார் அடிகளார். அத்தகு திருமந்திர நூலைப் பாடுதற்கே இத்தனைக் கட்டுப் பாடெனின், பொருள் தெரியாது படித்தல் எத்தனை இன்

திருவளரும் ஞானம் தினம்வளரும் படிஎம்மான்
குருவளரும் பனங்காட்டில் வீடுபெறக் கூடேனே

னலை உண்டாக்கும்! மருந்து நல்லதாயினும் பத்தியம் சிதைத்தார்க்குப் பலன் தராமையோடு வேறு தொல்லையும் விளைப்பது கண்கூடன்றோ?

இவ்விடர் களைதற்கென்றே எழுகிறது நமது குகஸ்ரீ இரசபதியார் இன்னுரை. சைவ நூற்பயிற்சியும் மந்திர நுட்பமும் இலக்கண அமைதியும் அறியா வெறும் புத்தகப் பூச்சிகள் இந்நூலுக்கு உரை காண முடியாது. ஆதலின், நமது நாயகர் தமது ஆழ்ந்த அனுபவம், சொல் வன்மை, எழுத்து நலம், தமக்கே உரிய செந்தமிழ் நடை, சைவச் சார்பு பிறவற்றால் இந்நூலுக்கு மிக அரிய உரை வகுத்துள்ளனர். முன்னரே பல நூற்களுக்கு உரை கண்ட இவருக்கு இச் செயல் மிக எளிதின் இயன்றது. சண்முக கவசத்திற்கு உரை எழுதினர் பலருளர். அவற்றிலெல்லாம் ஆக்கியோன் குறிப்பைத் தழுவிச் செல்லும் உரை இது எனல் மிகையன்று. இந்நூலை அனைவரும் படித்துப் பலனுறுக. இவ்வுரையை ஆக்கியோரும் அன்புடன் கற்போரும் அறுமுகன் திருவருளும் அடிகளார் தம் குருவருளும் பெற்றுய்வார்களாக.

கிடைக்குமிடங்கள் :

திருப்புகழ் அமிர்த காரியாலயம், சாமி நாயக்கன் தெரு, சென்னை.

அமிர்தவசனி, 54. பந்தர் தெரு, சென்னை-1.

விலை அணா 8.

மாமானை ஏந்திஅதன் வேகம் மடக்கியுள .
ஆமாத்தூர் அம்மானை, அகத்துவைத்து வாழ்வேனே

PEACE WITHIN AND PEACE WITHOUT

The Upanishads instruct us in the way of peace. The Holy chant runs as follows :

"Asatoma Sad Gamaya

"Thamasoma jyotir Gamaya

"Mrithyorma Amirtham Gamaya

"Om Santhi Santhi Santhi."

Saint Vallalar describes the truly holy man as one who considers every other living creature as the one life within himself and enjoys the world as the playground of the *one life* manifesting itself in lives innumerable. Such a man is at peace with himself within and without. Ahimsa is the watchword of peace. Such peace is born out of universal love, a quality of the mind which considers every life as equal to every other life, whatever may be the multi-proportioned form in which it may manifest itself. *Panchasila* represents those qualities of a saint when translated into an integrated body of men called a nation. Self-introspection and self-discipline are as important for nations as for men. If treaties of

peace are concluded on the basis of mutual fear as to what may happen, it can never secure the enjoyment of your liberty with equal regard for the liberty of others.

The world has recovered, not completely yet perhaps, from the apprehensions of a destructive world war. The world opinion declared itself against the aggression against Egypt. Aggression and covetousness are the enemies of humanity. When nations fall a prey to these asuraic or demoniac qualities, it is a great relief to find in some quarters the resurgent revolt of righteousness and justice. All honour to the dogged fight put up by the body of Englishmen, though a minority, who truly represent the nobility and conscience of the United Kingdom. The Satan in man must be silenced before man can ever emerge into the joy of peace. The wilderness of the human mind is continually haunted by beasts of prey and it is not until they are tamed to order and discipline, that you can have peace within and without. Diplomatic agreements cannot contribute to world peace so long as there are parties like Britain and France who do not hold themselves bound by the sacredness of the plighted word. The loyalty to peace and democracy professed by Britain and France has been betrayed by them in the recent invasion of Egypt, and this event will occupy some of the blackest pages of democratic history when it is written, where perfidy and covetousness were

enthroned as the idols of worship. God be thanked that the righteous minded and conscientious part of Britain and the world have saved mankind at least for a time from disaster and untold suffering. Will this continue? It lies as much with the efforts of the righteous minded as with the fervent prayers of holymen to the Almighty. May peace reign within the human breast and may that peace flood the world and convert the apostles of darkness into the knight errants of human liberty and peace and happiness.

Thiruppugal Mani.

415

அங்கணார் சிகாவளத்தில், ஏறுகின்ற ஆண்டவா!
மங்கை பாகணார்க்கு, வேத வாக்கு மூலம் சொன்னவா!
எங்குலம் தழைக்க வந்த ஏரகச் சுரேசனே!
சங்கையுற் றடுத்த என்றனைப் புணர்ந்து கொள்வையே!!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

-416-

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
சிவநேயச் செல்வர்கள்			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18